வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959
Reg. No.: P. 1632

# ஈழநாடு

Eelanadu

விலை ரூ. 30/=




Email : eelanaduweekly@gmail.com | மலர் : 07 | 18.03.2026 புதன்கிழமை | இதழ் : 71 | பக்கங்கள் : 08

# நாட்டை நெருக்கடியில் இருந்து மீட்க எமக்குத் தெரியும் முறையான திட்டமிடலுடன் சவாலை எதிர்கொள்வோம்!

### மக்களை அச்சங்கொள்ளவேண்டாம் என ஜனாதிபதி கோரிக்கை



கொழும்பு, மார்ச் 18

நாட்டில் தற்போது நிலவும் எரிசக்தி மற்றும் பொருளாதார நெருக்கடிகளை நிவர்த்தி செய்வதற்கு அரசாங்கம் உச்சக் கட்ட நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகிறது. நாட்டை நெருக்கடியில் இருந்து மீட்பது எப்படி என்பது எமக்கு தெரியும் என ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

உலகளாவிய ரீதியில் யுத்தம் எந்த எல்லைக்குச் சென்றாலும், இலங்கை தனது நடுநிலை கொள்கையிலிருந்து தவறாது என அவர் இதன்போது திட்டவட்டமாகத் தெரிவித்தார்.

நேற்றிரவு நடத்திய விசேட ஊடக சந்திப்பில் ஜனாதிபதி இதனைக் குறிப்பிட்டார்.

சர்வதேச அளவில் சில எரிபொருள் வழங்குநர்கள் கப்பல்களை அனுப்புவதில் சிக்கல்களை எதிர்நோக்கியுள்ளபோதிலும், நட்பு நாடுகளுடன் முன்னெடுக்கப்பட்ட இராஜதந்திரப் பேச்சுவார்த்தைகள்

07

## உலக உணவுப் பாதுகாப்புக்கு பெரும் அச்சுறுத்தல் ஏற்படும்!

### 45 மில்லியன் மக்கள் கடும் பசிக்குள்ளாகும் அபாயம்

ஜெனீவா, மார்ச் 18

ஈரான் மீது அமெரிக்கா மற்றும் இஸ்ரேல் முன்னெடுத்து வரும் வான்வழித் தாக்குதல்கள் எதிர்வரும் ஜூன் மாதம் வரை நீடிக்குமானால், உலகளவில் மேலதிகமாக 45 மில்லியன் மக்கள் கடும் பசி மற்றும் பட்டினிக்கு முகம் கொடுக்க நேரிடும் என உலக உணவுத் திட்டம் எச்சரித்துள்ளது.

ஜெனீவாவில் ஊடகவியலாளர்களிடம்

07

## அமைச்சருக்கு எதிரான பிரேரணை; கையொப்பமிட தமிழ் அரசு மறுப்பு!

கொழும்பு, மார்ச் 18

வலுசக்தி அமைச்சர் குமார ஜயக்கொடிக்கு எதிராக பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி கொண்டுவரவுள்ள நம்பிக்கையில்லாப் பிரேரணையில் கையொப்பமிடாமலிருக்க இலங்கைத் தமிழரசுக் கட்சி தீர்மானித்துள்ளது.

மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இரா. சாணக்கியன் தலைமையில்

07

### மத்திய கிழக்கு போர் சூழலால் ஏற்படும்

## பொருளாதார நெருக்கடியை சமாளிக்க 3 விசேட குழுக்கள் அரசினால் நியமனம்!

கொழும்பு, மார்ச் 18

மத்திய கிழக்கில் நிலவும் போர்ப் பதற்றங்கள் காரணமாக நாட்டுக்கு ஏற்படக்கூடிய பொருளாதார நெருக்கடிகளை முகாமைத்துவம் செய்வதற்காக மூன்று விசேட குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளதாக பிரதமர் ஹரினி அமரசூரிய தெரிவித்துள்ளார்.

நேற்றைய பாராளுமன்ற அமர்வில் உரையாற்றும்போதே பிரதமர் இதனைத் தெரிவித்தார்.

மக்களுக்குத் தேவையான அத்தியாவசியப் பொருட்கள் மற்றும் சேவைகள் தடையின்றி கிடைப்பதை உறுதி செய்தல் மற்றும் அவற்றை முகாமைத்துவம்

07

## சுதந்திர தினத்தன்று தேசியக் கொடியை இறக்கிய சந்தேகத்தில் 3 பேரை முன்னிலையாகப் பணிப்பு!



யாழ்ப்பாணம் மார்ச் 18

இலங்கையின் சுதந்திர தினமான பெப்ரவரி 4ஆம் திகதி, யாழ். பல்கலைக்கழகத்தில் சிங்கக் கொடியை இறக்கி - அதற்குப் பதிலாகக் கறுப்புக் கொடி ஏற்றப்பட்ட சம்பவம் தொடர்பில், 03 மாணவர்களை யாழ். மாவட்ட குற்றத்தடுப்புப் பிரிவில் முற்படுத்துமாறு பலகலைக்கழகப் பதிவாளரை மாவட்டக் குற்றத்தடுப்புப் பிரிவுப் பொறுப்பதிகாரி கேட்டுள்ளார்.

இந்தக் கடிதம் மாணவர் ஒழுக்காற்று அதிகாரிகளால் நேற்றுக் காலை மாணவர்களிடம் கையளிக்கப்பட்டு, மாணவர்களை விசாரணைக்குச் செல்லுமாறு

07

## இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவில் முன்னிலையானார் கோட்டாபய

கொழும்பு, மார்ச் 18

வாக்குமூலம் ஒன்றைப் பதிவு செய்வதற்காக நேற்று காலை இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழுவில்

07

## எரிபொருள் நெருக்கடியை எதிர்கொள்ள அவசர நடவடிக்கைகளை அறிவித்த அரசு!

### கட்டுப்பாடுகள் தொடர்பில் புதிய சுற்றறிக்கை

கொழும்பு, மார்ச் 18

எரிபொருள் விநியோகத் தடைகளை முன்கூட்டியே எதிர்கொள்ளும் வகையில், புதிய வழிகாட்டல்களை அரசாங்கம் வெளியிட்டுள்ளது.

பொது நிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் எஸ்.அலோக பண்டாரவினால் வெளியிடப்பட்டுள்ள 09/2026 இலக்க சுற்றறிக் கையில் இந்த விபரங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

மறு அறிவித்தல் வரை ஒவ்வொரு புதன் கிழமையும் அரச அலுவலகங்களின் செயல்பாடுகளுக்கு விடுமுறை தினமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

07

## பொதுப் போக்குவரத்து சேவைகள் புதன்கிழமை மட்டுப்படுத்தப்படும்

### அத்தியாவசிய சேவை ஆணையாளர் அறிவிப்பு

கொழும்பு, மார்ச் 18

அரசாங்க அலுவலகங்கள் மற்றும் பாடசாலைகள் புதன்கிழமைகளில் மூடப்படுவதால், அன்றைய தினங்களில் பொதுப் போக்குவரத்து சேவைகளையும் மட்டுப்படுத்த தீர்மானிக்கப்பட்டுள்ளதாக

07

## பாடசாலைகளுக்கு புதிய கட்டுப்பாடுகள்

கொழும்பு, மார்ச் 18

நாட்டில் நிலவும் எரிபொருள் நெருக்கடியைக் கருத்திற்கொண்டு, எரிசக்தியைச் சிக்கனமாகப் பயன்படுத்துவதற்காக பாடசாலைகளின் தினசரி நிர்வாக மற்றும் கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளில் கல்வி அமைச்சு சில மாற்றங்களை

07

## சாதாரண நடைமுறைகளை தாண்டி அவசரமாக எரிபொருள் கொள்வனவு

### அனுமதி வழங்கியது அமைச்சரவை

கொழும்பு, மார்ச் 18

மத்திய கிழக்குப் பிராந்தியத்தில் நிலவும் போர்ச் சூழல் மற்றும் அரசியல் பதற்றங்களால் உலகளாவிய எரிசக்தி சந்தையில் ஏற்பட்டுள்ள நிலையற்றத் தன்மையைக் கருத்தில் கொண்டு, இலங்கையின் எரிசக்தி பாதுகாப்பை உறுதிப்படுத்த அமைச்சரவை புதிய தீர்மானம் ஒன்றை மேற்கொண்டுள்ளது.

இதற்கமைய, அடுத்த 3 மாத காலத்திற்கு சாதாரண கொள்முதல் வழிகாட்டல்களுக்கு அப்பாற்பட்ட முறையில், நெகிழ்வான கட்டமைப்பின் கீழ்

07

## பாராளுமன்றம் இன்று கூடாது!

கொழும்பு, மார்ச் 18

பாராளுமன்றம் இன்று கூடாது என பாராளுமன்ற அலுவல்கள் பற்றிய குழு முடிவு செய்துள்ளது.

தற்போது நாட்டில் நிலவும் சூழ்நிலை காரணமாக பிரதி புதன் கிழமை அரச விடுமுறையாக

07

## திருகோணமலை எண்ணெய் தாங்கிகள் அபிவிருத்தியை ஜே.வி.பி.யே முடக்கியது

### வஜிர அபேவர்தன குற்றச்சாட்டு

கொழும்பு, மார்ச் 18

திருகோணமலை எண்ணெய் தாங்கிகளை புனரமைத்து அபிவிருத்தி செய்வதற்கு ரணில் விக்கிரமசிங்க மூன்று சந்தர்ப்பங்களில் எடுத்த முயற்சிகளை மக்கள் விடுதலை முன்னணி சீர்குலைத்துள்ளதாக

07

உண்மைகள் புனிதமானவை, கருத்துக்கள் சுதந்திரமானவை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலைகளின் நடவடிக்கைகள் எரிபொருள் தட்டுப்பாட்டால் பாதிப்பு

### இலங்கை ஆசிரியர் சங்கம் சுட்டிக்காட்டு

கொழும்பு, மார்ச் 18

நாட்டில் நிலவும் எரிபொருள் தட்டுப்பாடு காரணமாக பாடசாலை நடவடிக்கைகளும், கல்விப் பொதுத்தராதர சாதாரண தரப் பரீட்சை விடைத்தாள் மதிப்பீட்டுப் பணிகளும் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளதாக இலங்கை ஆசிரியர் சங்கம் எச்சரித்துள்ளது.

தற்போதைய எரிபொருள் நெருக்கடிக்கு உரிய தீர்வு காணப்படாவிடில், ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களின் வருகை பெருமளவில் பாதிக்கப்படும் எனச் சங்கத்தின் தலைவர் பிரியந்த பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

அநேகமான ஆசிரியர்கள் தமது போக்குவரத்துக்காக மோட்டார் சைக்கிள்களையே நம்பியிருப்பதாகச் சுட்டிக்காட்டிய அவர், தற்போது வழங்கப்படும் எரிபொருளின் அளவு வாராந்தத் தேவைகளுக்குப் போதுமானதாக இல்லை எனக் குறிப்பிட்டார்.

பாடசாலைகளுக்குச் செல்வதற்காகச் சில ஆசிரியர்கள் தினசரி 40 முதல் 50 கிலோமீற்றர் வரை பயணிக்க வேண்டியுள்ள நிலையில், எரிபொருளைப் பெற்றுக்கொள்வதற்காக அவர்கள் நீண்ட நேரம் செலவிட வேண்டியுள்ளதால் விடுமுறை விண்ணப்பிக்கும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

குறிப்பாக, தற்போது நடைபெற்று வரும் சாதாரண தரப் பரீட்சை விடைத்தாள் மதிப்பீட்டுப் பணிகளில் ஈடுபட்டுள்ள ஆசிரியர்கள், விடைத்தாள் மதிப்பீட்டு நிலையங்களுக்குச் செல்வதற்குத் தினமும் சுமார் 100 கிலோமீற்றர் வரை பயணிக்கவேண்டியுள்ளதால் கடும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர். (அ)

# பல்கலைக்கழக ஊழியர்கள் பணிப்புறக்கணிப்பு இல்லை!

கொழும்பு, மார்ச் 18

அனைத்துப் பல்கலைக்கழக தொழிற் சங்கங்களின் கூட்டுக் குழுவினால் நாளை வியாழக்கிழமை நாடளாவிய ரீதியில் முன்னெடுக்கப்படவிருந்த அடையாள தொழிற்சங்கப் போராட்டம் ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

நாட்டின் தற்போதைய நிலையைக் கருத்தில் கொண்டு மறு அறிவித்தல் அவரை இத் தொழிற்சங்க நடவடிக்கை ஒத்திவைக்கப்படுவதாக அனைத்துப் பல்கலைக்கழக தொழிற் சங்கங்களின் கூட்டுக்குழு அறிவித்துள்ளது.

அரசாங்கத்தினால் அறிவிக்கப்பட்ட புதிய சம்பள சீர்திருத்தத்தின் படி பல்கலைக்கழகங்களில் பணியாற்றும் போதனைசாரா ஊழியர்கள் எதிர்கொள்ளும் சம்பள முரண்பாடு உட்பட அடிப்படைப் பிரச்சினைகள் பலவற்றுக்குத் தீர்வு கோரி அரசாங்கத்திடம் கோரிக்கைகள் முன்வைக்கப்பட்ட போதிலும் ஆக்க பூர்வமான பதிலேதும் கிடைக்காத நிலையில் எதிர்வரும் 19 அடையாள வேலைநிறுத்தமும், அதன்பின் முறையான முன் அறிவிப்புடன் தொடர்ச்சியான தொழிற்சங்க நடவடிக்கைகளில் ஈடுபடவுள்ளதாகவும் அனைத்துப் பல்கலைக்கழக தொழிற் சங்கங்களின் கூட்டுக்குழு இம்மாத ஆரம்பத்தில் அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கதாகும். (ஒ)

# ரயில் சேவைகளில் பாதிப்பில்லை!

கொழும்பு, மார்ச் 18

நாட்டில் மீண்டும் எரிபொருள் கியூ.ஆர். குறியீடு முறைமை அமுல்படுத்தப்பட்டுள்ள போதிலும், ரயில் சேவைகள் எவ்வித தடையுமின்றி வழமை போல் இயங்கும் என ரயில்வே திணைக்களம் அறிவித்துள்ளது.

இது தொடர்பாக கருத்து வெளியிட்ட ரயில்வே திணைக்களத்தின் பொது மேலாளர் கே. ரவீந்திர பத்மப்பிரிய, ரயில் சேவைகளுக்கான எரிபொருள் ஒதுக்கீட்டை இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் நேரடியாக வழங்குவதாக தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

பொதுமக்களுக்கான கியூ.ஆர். ஒதுக்கீட்டு முறைமை ரயில் சேவைக்கு பொருந்தாது.

இதற்காக ஒதுக்கப்பட்டுள்ள பிரத்தியேக எரிபொருள் நிலையங்கள் ஊடாகவே ரயில்களுக்கு எரிபொருள் நிரப்பப்படுகிறது.

மேலும் ரயில்கள் திட்டமிட்டபடி தடையின்றி இயங்கும் என அவர் உறுதியளித்துள்ளார். ரயில்வே திணைக்களத்திற்கு என ஒதுக்கப்பட்ட எரிபொருள் நிலையங்கள், ரயில் நடவடிக்கைகளுக்காக மாத்திரமே பயன்படுத்தப்படும்.

அங்கிருந்து தனியார் துறைக்கோ அல்லது ஏனைய வாகனங்களுக்கோ எரிபொருள் வழங்கப்பட மாட்டாது-என்றார். (அ)

# நீர்மின் உற்பத்தி குறைந்தபோதிலும் மின்சார விநியோகம் பாதிக்கப்படாது

### எரிசக்தி அமைச்சு உறுதி



கொழும்பு, மார்ச் 18

நாட்டில் நீர்மின் உற்பத்தி குறைவடைந்துள்ள போதிலும், மின்சார விநியோகத்தில் எவ்வித பாதிப்பும் ஏற்படாது என எரிசக்தி அமைச்சு உறுதியளித்துள்ளது.

மழையற்ற காலநிலை மற்றும் நிலக்கரி இறக்குமதியில் ஏற்பட்டுள்ள தாமதங்கள் குறித்து எழுந்துள்ள அச்சங்களுக்குப் பதிலளிக்கும் வகையிலேயே பிரதி எரிசக்தி அமைச்சர் அர்க்கம் இலியாஸ் இந்த விளக்கத்தை அளித்துள்ளார்.

எதிர்பார்க்கப்பட்ட அளவு மழை கிடைக்காததால் நீர்மின் உற்பத்தித் திறன் குறையக்கூடும் என வளிமண்டலவியல் திணைக்களம் எச்சரித்துள்ளபோதிலும், நிலைமையைச் சீராகக் கையாள்வதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

குறிப்பாக, எரிசக்தி வளங்களை வினைத்திறனாகப் பகிர்ந்தளிப்பதற்கான கியூ.ஆர். குறியீடு அடிப்படையிலான நடைமுறைகள் இதற்காகப் பயன்படுத்தப்படுவதாக அவர் சுட்டிக்காட்டினார்.

இதேவேளை, நிலக்கரி ஏற்றி வரும் கப்பல்கள் வருகை தருவதில் தாமதம் ஏற்பட்டுள்ளதாகச் சமூக ஊடகங்களில் பரவி வரும் தகவல்கள் தொடர்பில் கருத்துத் தெரிவித்த அவர், சில கப்பல்கள் தாமதத்தை அறிவித்துள்ளபோதிலும், அவை தற்போது இலங்கையை நோக்கிப் பயணித்துக் கொண்டிருப்பதாக குறிப்பிட்டார். (அ)

# அரச பரீட்சைகளிலும் தாக்கம் ஏற்படலாம்!



கொழும்பு, மார்ச் 18

மத்திய கிழக்கில் நிலவும் போர் சூழல் காரணமாக இலங்கையில் ஏற்பட்டுள்ள மின்சக்தி மற்றும் எரிபொருள் சவால்கள், எதிர்வரும் அரச பரீட்சைகளில் ஓரளவுக்குத் தாக்கத்தை ஏற்படுத்தக்கூடும் என அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் நாயகம் பிரபாத் சந்திரகீர்த்தி தெரிவித்துள்ளார்.

ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்குப் பதிலளித்த ஆணையாளர் நாயகம், தற்போது நிலவும் மின்சக்தி மற்றும் எரிபொருள் சிக்கல்கள் காரணமாக, திட்டமிடப்பட்டுள்ள அரச பரீட்சைகளை நடத்துவதில் சில சவால்கள் அல்லது தாக்கங்கள் ஏற்பட வாய்ப்புள்ளதாகச் சுட்டிக்காட்டினார்.

மின்சக்தி நுகர்வைக் கட்டுப்படுத்த அரசாங்கம் பல்வேறு மாற்று வழிகளைத் தேடி வரும் நிலையில், மாணவர்களின் பரீட்சை விவகாரத்திலும் இவ்வாறானதொரு நிச்சயமற்ற நிலை உருவாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# மீன்களின் விலை சரிவு

கொழும்பு, மார்ச் 18

சர்வதேச விமானப் போக்குவரத்துப் பாதைகளில் ஏற்பட்டுள்ள இடையூறுகள் காரணமாக, இலங்கையிலிருந்து மீன் ஏற்றுமதி வீழ்ச்சியடைந்துள்ளது.

இதன் நேரடி விளைவாக உள்நாட்டுச் சந்தையில் மீன்களின் விலைகள் கணிசமாகக் குறைந்துள்ளதாக மீன்பிடி, நீரியல் மற்றும் கடல் வளங்கள் அபிவிருத்தி அமைச்சு தெரிவித்துள்ளது.

மத்திய கிழக்கில் நிலவும் போர் பதற்றங்கள் காரணமாக விமானப் போக்குவரத்துப் பாதைகள் பாதிக்கப்பட்டுள்ளதால் ஏற்றுமதி செய்யப்பட வேண்டிய மீன்கள் தற்போது உள்நாட்டுச் சந்தைக்கு விநியோகிக்கப்படுகின்றன.

குறிப்பாக, நடுத்தர வர்க்கக் குடும்பங்கள் விரும்பி உண்ணும் மீன் வகைகள் தற்போது குறைந்த விலையில் கிடைக்கப் பெறுகின்றன.

தற்போதைய நிலவரப்படி, ஒரு கிலோ மீன் சுமார் 1,000 ரூபா வரையான குறைந்த விலையில் விற்பனை செய்யப்படுவதாக அமைச்சு குறிப்பிட்டுள்ளது. (அ)

# சமூக ஊடகங்களில் பரவிவரும் போலி விழிப்புணர்வுப் பதிவுகள்

### பொலிஸார் எச்சரிக்கை

கொழும்பு, மார்ச் 18

"இலங்கை பொலிஸ் திணைக்களத்தின் விழிப்புணர்வு" என்ற தலைப்பின் கீழ் பொதுமக்களுக்கு வழிகாட்டுதல் வழங்குவதாகக் கூறி சமூக ஊடகங்களில் பரவி வரும் போலிப் பதிவுகள் குறித்து இலங்கை பொலிஸ் பொதுமக்களை எச்சரித்துள்ளது.

இது தொடர்பில் ஒரு அறிக்கையை வெளியிட்ட பொலிஸார்-

அனைத்து அதிகாரபூர்வ விழிப்புணர்வுச் செய்திகளும், பொலிஸ் திணைக்களத்தின் அதிகாரபூர்வ ஊடக வெளியீடுகளாக உரிய கடிதத் தலைப்பின் கீழ் பொலிஸ் ஊடகப் பிரிவு மூலமாக மட்டுமே வெளியிடப்படுகின்றன என்றும் அவர்கள் தெளிவுபடுத்தியுள்ளனர்.

பொலிஸாரால் வெளியிடப்பட்டதாகத் தவறாகக் கூறி, தனிநபர்களோ அல்லது குழுக்களோ பதிவுகளைப் பரப்பினால், அது ஒரு திட்டமிட்ட நடவடிக்கையின் பகுதியா என்பதை விசாரிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் பொலிஸார் மேலும் கூறியுள்ளனர்.

அத்தகைய பதிவுகளின் உள்ளடக்கம் குறித்து பொதுமக்கள் எச்சரிக்கையுடன் செயல்படுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். (அ)

# சாவகச்சேரி நகரில் அதிநவீன வீதிவிளக்கு பொருத்தும் பணி

யாழ்ப்பாணம், மார்ச் 18

சாவகச்சேரி நகராட்சி மன்ற எல்லைக்குட்பட்ட பிரதான வீதிகளுக்கு அதிநவீன வீதிவிளக்குகள் பொருத்தும் பணிகள் நேற்று முன் தினம் ஆரம்பித்து வைக்கப்பட்டன.

நகரசபைத் தவிசாளர் வ.சிறீபிரகாஸ் மற்றும் உபதவிசாளர் ஞா.கிஷோர் ஆகியோரால் குறித்த திட்டம் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

நகராட்சி மன்றத்தின் சுமார் 2.5 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீட்டில் கொள்வனவு செய்யப்பட்ட சுமார் 160 வீதிவிளக்குகள் நகரின் பிரதான வீதிகளில் பொருத்தப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu
18.03.2026 புதன்கிழமை
விசுவாவசு வருடம், பங்குனி 04

"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com

## நெருக்கடி நிலையில் எதிரணியின் விசித்திரமான போக்குகள்

இலங்கையை ஏழு தசாப்தங்களுக்கும் அதிகமான காலமாக ஆட்சிசெய்து நாடும் மக்களும் இன்று முகங்கொடுக்கின்ற பெரும்பாலான பிரச்னைகளுக்கு காரணமான பாரம்பரிய அரசியல் கட்சிகள் தற்போது எதிரணியில் இருந்து கொண்டு சமகாலப் பிரச்னைகளை எவ்வாறு கையாள வேண்டும் என்பது தொடர்பில் தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்துக்கு கூறுகின்ற ஆலோசனைகள் வியப்பபைத் தருகின்றன.

தாங்கள் தற்போது அதிகாரத்தில் இருந்தால் மத்திய கிழக்கு போரின் விளைவான தாக்கங்கள் உட்பட சகல பிரச்சினைகளையும் மிகவும் சுலபமாக வும் சாதுரியமாகவும் கையாண்டிருப்பார்கள் என்ற பாவனையில் எதிரணி அரசியல்வாதிகள் பேசுகிறார்கள்.

ஈரான் மீது அமெரிக்காவும் இஸ்ரேலும் தொடுத்திருக்கும் போரின் விளைவாக பெரும்பாலும் உலகின் சகல நாடுகளுமே பாதிக்கப்படுகின்றன. எரிபொருள் விநியோகத்தில் ஏற்பட்டிருக்கும் தடங்கல்களுக்கு விரைவில் முடிவு கிட்டாத பட்சத்தில் கொரோனா பெருந்தொற்று நோய்க் காலப்பகுதியில் நாடுகள் முடங்கி யதைப் போல முடங்க வேண்டிய நிலை தோன்றுவதைக்கூட தவிர்க்க முடியாமல் போகலாம்.

இன்றைய தருணத்தில் பாரம்பரியமான கட்சி அரசியல் பகைமையைக் கைவிட்டு அரசாங்கத்துடன் ஒத்துழைத்து நெருக்கடி நிலையைக் கையாளுவ தில் தான் எதிரணித் தலைவர்கள் கருத்தூன்றிய கவனம் செலுத்த வேண்டும். ஆனால், அவர்கள் அரசாங்கத்தை எதிர்ப்பதற்கு பொதுவேலைத் திட்டம் ஒன்றுக்கு இணங்குவது குறித்து ஆராயந்து வருகிறார்கள்.

இந்து சமுத்திரத்தில் இலங்கையின் பிரத்தியேக பொருளாதார வலயத்திற்குள் ஈரானியப் போர்க்கப்பல் அமெரிக்க நீர்மூழ்கியின் தாக்குதலில் மூழ்கடிக்கப்பட்ட தைத் தொடர்ந்து ஏற்பட்ட நிலைவரத்தை தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் மிகவும் திறமையாகக் கைக் கொண்டது குறித்து பரவலாக பாராட்டுக்கள் தெரி விக்கப்பட்டுவரும் நிலையில், சர்வதேச அரங்கின் நிகழ்வுப் போக்குகளை உகந்த முறையில் மதிப்பீடு செய்து இராஜதந்திரத் திறமையுடன் விவகாரங்களை கையாளுவதற்கு அரசாங்கம் தவறிவிட்டதாக எதிர்க்கட்சிகள் குற்றஞ்சாட்டு கின்றன.

மத்திய கிழக்கு போர் நெருக்கடியின் விளைவான தாக்கங்களை குறைப்பதற்கு அரசாங்கம் முன்கூட்டியே உரிய நடவடிக்கைகளை எடுக்க வில்லை என்றும் தற்போது முன்னெடுக்கப்படும் நடவடிக்கைகள் காலம் தாழ்த்தியவையாக இருக்கின்றன என்றும் ஐக்கிய தேசிய கட்சியின் தவிசாளர் வஜிர அபேகுணவர்தன திங்கட்கிழமை செய்தியாளர்கள் சந்திப்பில் கூறினார்.

இலங்கையின் உள்நாட்டு மற்றும் வெளியுறவுப் பிரச்சினைகள் சகலவற் றையும் மிகுத்த மதிநுட்பத்துடன் கையாளக்கூடிய ஒரே இலங்கை அரசியல் தலைவர் என்றால் அது ஐக்கிய தேசிய கட்சியின் தலைவரான முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மாத்திரமே என்று அதீத நம்பிக்கை கொண்டி ருப்பவரான அபேகுணவர்தன தற்போதைய நெருக்கடிகளை கையாள முடியா மல் தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் இருப்பதால் பாராளுமன்றத்தைக் கலைத்து திடீர்ப் பொதுத்தேர்தல் நடத்தப்பட வேண்டும் என்றும் கோரிக்கை விடுத்திருக் கிறார்.

அரசாங்கத்தை சகல விடயங்களிலும் எதிர்க்க வேண்டும் என்ற தீவிர முனைப்பில் எத்தகைய காலப்பகுதியில் எந்தவிதமான கோரிக்கையை முன் வைக்க வேண்டும் என்பதைக் கூட தெரியாதவர்களாக இந்த எதிரணி அரசியல் வாதிகள் இருக்கிறார்கள்.

இலங்கையின் பிரத்தியேக பொருளாதார வலயத்திற்குள் அமெரிக்க நீர் மூழ்கி ஈரானியக் கப்பலை மூழ்கடித்த சம்பவத்துக்காக கொழும்பில் உள்ள அமெரிக்கத் தூதுவரை வெளியுறவு அமைச்சுக்கு அழைத்து கடுமையான கண்டனத்தை அரசாங்கம் தெரிவித்திருக்க வேண்டும் என்று கூறிய அரசியல் வாதியும் எதிரணியில் இருக்கிறார்.

அந்த "ஆலோசனையை" கேட்டு நடக்கிற அளவுக்கு இன்றைய அரசாங்கத் தலைவர்கள் ஒன்றும் சூதுவாதற்ற அப்பாவிகள் இல்லை.

## போர் பதற்றத்தால் இலங்கைக்கு வரும் விமான சேவைகள் தொடர்ந்து தாமதம்

கொழும்பு, மார்ச். 18

மத்திய கிழக்கு பிராந்தியத்தில் நிலவும் போர்ச் சூழல் காரணமாக, இலங்கைக்கு வரும் விமான சேவைகள் தொடர்ந்து தாமதங்களை எதிர்நோக்கி வருவதாக இலங்கைச் சிவில் விமானப் போக்குவரத்து அதிகார சபை தெரி வித்துள்ளது.

நேற்று முன்தினம் திங்கட்கிழமை சுமார் நான்கு விமானங்கள் மட்டுமே இயக்கப்பட் டன என்று சிவில் விமானப் போக்குவரத்து அதிகார சபையின் பணிப்பாளர் நாயகம் தமிந்த ரம்புவெல்ல தெரிவித்தார்.

வான்பரப்பு மூடப்பட்டமை மற்றும் மத்திய கிழக்கின் போர் பதற்றம் காரணமாக பெரும்பாலான வெளிநாட்டு விமான நிறுவ னங்கள் தமது திட்டமிடப்பட்ட விமான சேவைகளை இரத்து செய்துள்ளன.

நேற்று முன்தினம் ஒரு சில விமானங்கள் மட்டுமே சேவையில் ஈடுபட்டன. அவற்றில் முக்கியமானவை, சலாம் ஏர், எதிஹாட் ஏர் வேஸ், சிறீலங்கன் ஏர்லைன்ஸ் என்பனவாகும்.

மத்திய கிழக்கின் பல விமான நிலையங்கள் மூடப்பட்டுள்ளதாலும், வான்பரப்பு மட்டுப்ப டுத்தப்பட்டுள்ளதாலும் பெரும்பாலான சர்வ தேச விமான நிறுவனங்கள் தமது சேவைகளை நிறுத்தியுள்ளன. இது பிராந்தியத்தில் நிலவும் நெருக்கடியான சூழலை பிரதிபலிக்கின்றமை குறிப்பிடத்தக்கது. (எ)

## சிறுமி வன்புணர்வு குற்றவாளிக்கு 15 வருட கடூழிய சிறை தண்டனை

வவுனியா, மார்ச். 18

வவுனியா, ஓமந்தை பகுதியைச் சேர்ந்த 15 வயது சிறு மியை பாலியல் வன்புணர்வு புரிந்த குற்றவாளிக்கு 15 ஆண் டுகள் கடூழியச் சிறைத் தண்டனை விதித்து வவுனியா மேல் நீதிமன்ற நீதிபதி ஏ. ஏ. ஆனந்தராஜா தீர்ப்பளித்துள்ளார்.

கடந்த 2013 ஆம் ஆண்டு வவுனியா, ஓமந்தை பகுதியைச் சேர்ந்த 15 வயது சிறுமியை பாலியல் வன்புணர்வு செய்த தாக அதே இடத்தைச் சேர்ந்த சிறுமியின் தாயின் சகோதர ரான 47 வயது சந்தேக நபரை பொலிஸார் கைது செய்து வவுனியா நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தி வழக்கு தொட ரப்பட்டது.

சந்தேக நபருக்கு எதிராக சட்டமா அதிபர் திணைக்களத் தால் குற்றப் பத்திரம் தாக்கல் செய்யப்பட்டு வவுனியா மேல் நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டது. குறித்த வழக்கின் சந்தேக நபரான ஓமந்தை பகுதியில் வசித்து வந்த 47வயது நபர் தொடர்பான இரு குற்றச்சாட்டுக்களை அவர் ஏற்றுக் கொண்டார். இதனையடுத்து குற்றவாளிக்கு முதலாவது குற்றச்சாட்டுக்கு 15 வருட கடூழியச் சிறைத் தண்டனை வழங் கியதுடன், 25 ஆயிரம் ரூபாய் தண்டப்பணம் செலுத்துமா றும், தவறின் 6 மாதகால சாதாரண சிறைத் தண்டனையும், பாதிக்கப்பட்ட சிறுமிக்கு மூன்று இலட்சம் ரூபாய் செலுத்த வேண்டும் எனவும் தவறின், 2 வருட சிறைத் தண்டனையும் வழங்கி தீர்ப்பு அளிக்கப்பட்டது.

அத்துடன், இரண்டாவது குற்றத்துக்காக 15 வருட சிறைத் தண்டனையும் 25 ஆயிரம் ரூபாய் தண்டப்பணமும் செலுத்த வேண்டும் எனவும் தீர்ப்பளித்தார். (எ)

## ஆசிய சந்தையில் மசகு எண்ணெய் விலை அதிகரிப்பு

கொழும்பு, மார்ச். 18

ஆசிய சந்தை நிலவரப்படி, பிரெண்ட் ரக மசகு எண்ணெ யின் விலை 2.8 சதவீதத்தால் அதிகரித்து, ஒரு பீப்பாய் 103.08 டொலராக பதிவாகியுள்ளது.

இதேபோல், அமெரிக்க மசகு எண்ணெயின் விலையும் சுமார் 3 சதவீதத்தால் அதிகரித்து 96.25 டொலராக பதிவாகியுள்ளது.

ஹோர்முஸ் நீரிணை ஊடாக சில கப்பல்கள் பாதுகாப்பாக பய ணித்ததாக வெளியான தகவல் களை அடுத்து, நேற்று முன்தினம் எண்ணெய் விலை சற்று வீழ்ச்சிய டைந்திருந்தது.

இதேவேளை, தமது எரிசக்தித் தேவைகளுக்காக வளைகுடா பிராந்தியத்தின் எண்ணெயை நம்பியிருக்கும் ஜப்பான் மற்றும் தென்கொரியா உள்ளிட்ட ஆசிய பங்குச் சந்தை குறியீடுகள் நேற்று சற்று உயர்வான பெறுமதியுடன் ஆரம்பமாகின. (எ)

## விசுவமடு தொட்டியடி பகுதியில் முதிரை மரக்கடத்தல் முறியடிப்பு

முல்லைத்தீவு, மார்ச் 18

முல்லைத்தீவு மாவட்டத் தின் விசுவமடு தொட்டியடி பகுதியில் வனஜீவராசிகள் திணைக்களத்தினர் மற்றும் பொலிஸ் விசேட அதிரடிப் படையினரால் பாரியளவி லான முதிரை மரக்கடத்தல் முறியடிக்கப்பட்டது.

வெளி மாவட்டங்களுக்கு கொண்டு செல்வதற்காக தயார் நிலையில் மறைத்து வைக்கப்பட்டிருந்த 5 இலட் சம் ரூபாவுக்கும் அதிக பெறு மதியான முதிரை குற்றிகளும், மூன்று உழவு இயந்திரங்க ளும் கைப்பற்றப்பட்டுள்ளன.

குறித்த சம்பவத்தின் போது சம்பந்தப்பட்ட சந் தேக நபர்கள் அப்பகுதியில் இருந்து தப்பிச் சென்றுள்ள னர்.

இச்சம்பவம் தொடர் பான மேலதிக விசாரணை களை பொலிஸார் மேற் கொண்டு வருகின்றனர். (அ)

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மார்ச் - 18 புதன்கிழமை
விசுவாவசு வருடம் - பங்குனி 04
நல்ல நேரம் : 09.00 - 10.30
ராகு காலம் : 12.00 - 01.30
திதி : அமாவாசை




**மேடம்**
ராஜதந்திரமாக செயல்பட்டு சில காரியங்களை முடிப்பீர்கள். பழைய கடனில் ஒருபகுதியை பைசல் செய்வீர்கள். வியாபார ரீதியாக சில முக்கியஸ்தர்களை சந்திப்பீர்கள். கவனத்தையும் ஈர்ப்பீர்கள்.

**இடபம்**
மற்றவர்களுக்காக சில பொறுப்புகளை ஏற்பீர்கள். வீடு வாகனத்தை சீர் செய்வீர்கள். எதிர்பார்த்திருந்த தொகை கைக்குரும். அதிகாரி உங்களை மதிப்பார். திடீர் திருப்பம் நிறைந்த நாள்.

**மிதுனம்**
இதுவரை இருந்த அலைச்சல் டென்ஷன் யாவும் நீங்கும். குடும்பத்தில் அமைதி திரும்பும். எதிர்மறை சிந்தனைகள் பிறக்கும். இழந்த உரிமையை பெறுவீர்கள். மனநிறைவு கிட்டும் நாள்.

**கடகம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் நீங்கள் சிலருக்கு நல்லது சொல்லப்போய் பொல்லாப் ஆக போய் முடியும். குடும்பத்தில் உள்ளவர்கள் யாரும் தன்னைப் அதிகாரிகளுடன் பனிப்போர் வந்து நீங்கும்.

**சிம்மம்**
விரும்பிய பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள். கல்யாண பேச்சுவார்த்தை வெற்றியடையும். சகோதர வகையில் நன்மை உண்டு. அதிகாரிகளுக்கு உதவுவீர்கள். திறமைகள் வெளிப்படும் நாள்.

**கன்னி**
வழக்கு சாதகமாக தீர்ப்பு வரும். நெடுநாட்களாக பார்க்க நினைத்த ஒருவர் உங்களை தேடி வருவார். அரசால் அனுகூலம் உண்டு. உத்தியோகத்தில் உங்கள் கருத்திற்கு ஆதரவு பெருகும்.

**துலாம்**
பிள்ளைகளின் போக்கில் நல்ல மாற்றம் உண்டாகும். வேற்றுமதத்தவர் உதவுவார். வியாபாரத்தில் புது வேலையாட்கள் அமைவார்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்கள் ஆதரிப்பார்கள்.

**விருட்சிகம்**
பயணங்களால் அலைச்சல் இருந்தாலும் ஆதாயமும் உண்டு. தாயாருடன் வீண் விவாதம் வந்து போகும். பிரியமானவர்களின் சந்திப்பு நிகழும். உத்தியோகத்தில் சூழ்ச்சிகளை முறியடிப்பீர்கள்.

**தனுசு**
உங்களிடம் பழகும் நண்பர்கள் உறவினர்களின் பலம் பலவீனத்தை உணர்வீர்கள். வியாபாரத்தில் அதிரடியான திட்டங்கள் தீட்டுவீர்கள். அதிகாரிகளுக்கு சில ஆலோசனைகள் தருவீர்கள்.

**மகரம்**
கடந்த இரண்டு நாட்களாக கணவன்-மனைவிக்குள் இருந்த மனக்கசப்பு நீங்கும். அழகும் இளமையும் கூடும். வியாபாரத்தில் கூடுதல் லாபம் கிடைக்கும். மதிப்பார்கள். தடைகள் உடைபடும் நாள்.

**கும்பம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் சில காரியங்களை போராடி முடிப்பீர்கள். குடும்பத்தில் சலசலப்புகள் வரும். சக ஊழியர்களின் விஷயங்களில் தலையிட வேண்டாம். எதிர்பார்ப்பு தாமதமாக முடியும்.

**மீனம்**
விவாதங்களை தவிர்ப்பது நல்லது. சகோதர வகையில் மனத்தாங்கல் வரும். வியாபாரத்தில் வேலையாட்களை அனுசரித்துப் போங்கள். உத்தியோகத்தில் மறைமுக பிரச்னைகள் வரக்கூடும்.

# சிறுபிள்ளைத்தனமாக நடந்து கொள்கிறார் சஜித்

## ஜெகதீஸ்வரன் எம். பி. சாடல்

மன்னார், மார்ச். 18

நாட்டு மக்களுக்கு சீரான முறையில் எரிபொருளை பெற்றுக் கொடுக்க தற்போதைய அரசாங்கம் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது. இருந்த போதும் எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ உள்ளிட்ட தரப்பினர் சிறுபிள்ளைத் தனமாக நடந்து கொள்கின்றனர் என்று பாராளுமன்ற உறுப்பினர் ம. ஜெகதீஸ்வரன் தெரிவித்தார்.

மன்னாரில் உள்ள அவரது அலுவலகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகச் சந்திப்பின் போது அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"எதிர்வரும் வாரங்களில் வரிசையிலே அவ்வாறு இருக்கக்கூடிய ஒரு நிலைமை ஏற்படின், அந்த வரிசையிலே நின்று எரிபொருளைப் பெற்றுக்கொள்ளக்கூடிய மக்களுக்கான வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்க இருக்கிறோம். குறிப்பாக அவர்களுக்குரிய மலசலகூட வசதிகள், அதேபோல் அவர்கள் வெயிலில் நிற்காத வகையிலே ஏற்பாடுகள் செய்யப்படவுள்ளன.

இந்த எரிபொருள் தொடர்பாக, எரிபொருள் தட்டுப்பாடு தொடர்பாக ஏதோ வேற்று கிரகத்திலிருந்து அல்லது வேறு உலகத்தில் இருந்து வந்தவர்கள் போல எதிர்க்கட்சியினர், அரசாங்கத்தைக் குற்றம் சாட்டுகின்ற நிலை உள்ளது.

இவர்களுக்குப் புரியவில்லையா? உலகிலே ஒட்டுமொத்தமான நாடுகளுமே, முழு உலகமுமே இந்த எரிபொருள் நெருக்கடிக்கு உள்ளாகி இருக்கின்றது. இலங்கை மட்டுமல்ல. இவர்கள் ஒரு சந்தர்ப்பவாதத்தை இங்கு பயன்படுத்திக் கொள்கிறார்கள்.

அவர்களுடைய இந்தச் சந்தர்ப்பவாதம் எடுபடப் போவதில்லை. மக்களுக்குத் தெரியும், மக்கள் தெளிவாக அறிந்திருக்கிறார்கள் இது ஒட்டுமொத்தமான உலகத்துக்கான பிரச்னை. இவர்கள் தங்களுடைய ஒரு கீழ்த்தரமான, மலிவான அரசியலை மேற்கொள்வதற்காக இவ்வகையாக கூறிக்கொண்டிருக்கிறார்கள்."- என்றார். (எ)

# வவுனியா தாதியர் பயிற்சிக்கல்லூரியின் தேவைப்பாடுகள் தொடர்பில் ஆராய்வு

வவுனியா, மார்ச். 18

வவுனியா தாதியர் பயிற்சிக் கல்லூரியின் தேவைப்பாடுகள், பிரச்னைகள் தொடர்பில் ஆராய்வதற்காக தமிழ் அரசுக் கட்சியின் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ப. சத்தியலிங்கம் நேற்று முன்தினம் தாதியர் பயிற்சிக்கல்லூரிக்கு சென்றிருந்தார்.

தாதியர் பயிற்சிக்கல்லூரி சமூகத்தின் கோரிக்கையின் பிரகாரம் அங்கு சென்ற சத்தியலிங்கம் எம். பி, தாதியர் பயிற்சிக் கல்லூரியின் அதிபர், பிரதி அதிபர், உத்தியோகத்தர்கள் ஆகியோருடன் தேவைப்பாடுகள் மற்றும் பிரச்னைகள் தொடர்பில் நீண்ட கலந்துரையாடலில் ஈடுபட்டிருந்தார்.

அத்துடன் பயிற்சிக்கல்லூரி வளாகத்தையும் பார்வையிட்டதுடன், குறைபாடுகள் தொடர்பிலும் அவதானம் செலுத்தியிருந்தார்.

அடையாளம் காணப்பட்ட மற்றும் முன்னிலைப்படுத்தப்பட்ட பிரச்னைகள், தேவைப்பாடுகள் தொடர்பில் சுகாதார அமைச்சர் மற்றும் அமைச்சின் உயர்மட்ட அதிகாரிகளின் கவனத்துக்கு உடனடியாக கொண்டுசென்று அவற்றினை தீர்த்து வைப்பதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொள்வதாக பாராளுமன்ற உறுப்பினர் தெரிவித்தார். (எ-10)

# "கால்நடை உரிமையாளர்கள் மீது சட்டநடவடிக்கை எடுக்கப்படும்"

முல்லைத்தீவு, மார்ச்.18

இரவு நேர கால் நடைகளை கட்டுப்படுத்துங்கள். இல்லையெனில் கால்நடை உரிமையாளர்கள் மீது சட்டநடவடிக்கை எடுக்கப்படும் என்று மாந்தை கிழக்கு பிரதேச சபையின் உபதவிசாளர் ச. சத்தியவரதன் தெரிவித்தார்.

பிரதேச சபையில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

"கால்நடை பண்ணையாளர்களுக்கு இறுதி அறிவித்தல் ஒன்றை விடுக்கின்றோம். இரவு நேரங்களில் கட்டாக்காலியாக நடமாடும் கால்நடைகளை கட்டுப்படுத்தல் தொடர்பில் உரிமையாளர்களுக்கு பலதடவைகள் அறிவுறுத்தல் விடுக்கப்பட்டும் உரிமையாளர்கள் அசண்டையீனமாக செயல்படுகின்றனர்.

இந்த கால்நடைகளை இரவு நேரங்களில் விடுவதால் இரண்டு பாரிய பிரச்னைகளை எதிர்கொள்கின்றோம்.

கால்நடைகள் களவாடப்படுகின்றன.

மற்றையது வீதி விபத்துக்களை இவை ஏற்படுத்துகின்றன. இதற்கு பதில் சொல்ல வேண்டியது எமது பிரதேச சபை, ஏனென்றால் கட்டாக்காலியாக திரிகின்ற கால்நடைகளை இரவு நேரங்களில் கட்டுப்படுத்தவேண்டிய பொறுப்பு பிரதேச சபையினருடையது, இதனால் நாங்கள் மக்களுக்கும் திணைக்களங்களுக்கும் மேலதிகாரிகளுக்கும் பதில் சொல்ல வேண்டியவர்களாக இருக்கின்றோம். இதனால், கட்டாக்காலி கால்நடைகளை கட்டுப்படுத்த வேண்டிய தேவை எமக்கு உள்ளது."- என்றார். (எ)

# சிறுப்பிட்டி முத்துமாரியில் சிறப்புச்சொற்பொழிவு

யாழ்ப்பாணம், மார்ச். 18


சிறுப்பிட்டி வடக்கு மாதியந்தனை இலுப்பையடி அருள்மிகு சிறீ முத்துமாரி அம்பாள் தேவஸ்தான வருடாந்த அலங்கார உற்சவத்தை முன்னிட்டு சிறப்புச்சொற்பொழிவு ஆலய பிரதான மண்டபத்தில் எதிர்வரும் 22 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை தொடக்கம் ஏப்ரல் முதலாம் திகதி புதன்கிழமை வரை தினமும் மாலை 06. 30 மணிக்கு சமயஜோதி கதிர்காமன் நிஜலிங்கம் ஒழுங்கமைப்பில் நடைபெறவுள்ளது. அந்தவகையில் சைவப்புலவர்கள் ஏ. அனுசாந்தன், கந்த. சத்தியதாசன், சி. கா. கமலநாதன், பொன். சந்திரவேல், ச. முகுந்தன், க. கைலநாதனும், இளஞ்சைவப்புலவர்கள் ச. நவநீதன், க. கயிலைவாசன், நித்திய பாபுதரன் ஆகியோர்களின் சொற்பொழிவும் நடைபெறும்.

# கரவெட்டியில் சமூக உற்பத்தித்திறன் மாதிரிக் கிராமத் திட்டம் ஆரம்பம்

யாழ்ப்பாணம், மார்ச். 18

கிளீன் சிறீலங்கா தேசிய வேலைத்திட்டத்தின் கீழ் தேசிய உற்பத்தித்திறன் செயலகத்தால் முன்னெடுக்கப்படும் சமூக உற்பத்தித்திறன் மாதிரி கிராமங்களை அங்குரார்ப்பணம் செய்யும் தேசிய வேலைத் திட்டம் நேற்று முன்தினம் களுத்துறை பிரதேச செயலக பிரிவின் "சிவ்தேவிகம" கிராமத்தில் நடைபெற்றது. சமநேரத்தில் நாடளாவிய ரீதியாக இந்நிகழ்வு நடைபெற்றது.

அந்தவகையில் யாழ். மாவட்டத்துக்கான சமூக உற்பத்தித்திறன் மாதிரி கிராமத்திட்டத்தின் ஆரம்ப



நிகழ்வு கரவெட்டி பிரதேச செயலர் பிரிவின் கரவெட்டி மேற்கு கிராம உத்தியோகத்தர் பிரிவின், இராஜ கிராமத்தின் கரவைச்சுடர் மைதானத்தில் நடைபெற்றது. (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இனிவரும் புதன்கிழமைகளில் மேலதிக வகுப்புகளுக்கு தடை

கொழும்பு, மார்ச். 18

இனிவரும் புதன்கிழமைகளில் மேலதிக வகுப்புக்களை நடத்துவதும் தடை செய்யப்பட்டுள்ளது என்று அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் நாயகம் பிரபாத் சந்திரகீர்த்தி தெரிவித்தார்.

எரிபொருள் விநியோகச் சிக்கலைக் கருத்தில்கொண்டு, அனைத்து அரச பாடசாலைகளுக்கும் ஒவ்வொரு புதன்கிழமையும் விடுமுறை வழங்க முன்னதாகத் தீர்மானிக்கப்பட்டிருந்தது.

இதன்படி, ஒவ்வொரு வாரமும் புதன்கிழமை நீதிமன்றச் சேவைகள், பாடசாலைகள் மற்றும் பல்கலைக்கழகங்கள் உள்ளிட்ட அரச அலுவலகங்களுக்கான விடுமுறை தினமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

சுகாதாரம், துறைமுகம், நீர் வழங்கல், மின்சக்தி மற்றும் சுங்கம் ஆகிய அரச நிறுவனங்களுக்கு இந்த விசேட விடுமுறை பொருந்தாது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)

# பல்கலைக்கழக விரிவுரைகளை இணையவழியில் நடத்துங்கள்

கொழும்பு, மார்ச். 18

பல்கலைக்கழக விரிவுரைகளை இணையவழியில் முன்னெடுக்குமாறு அனைத்துத் துணைவேந்தர்களுக்கும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு அறிவுறுத்தியுள்ளது.

எரிபொருள் தட்டுப்பாட்டினால் ஏற்படும் போக்குவரத்துச் சிரமங்களைக் குறைக்கவும், அதேநேரம் கல்வி நடவடிக்கைகள் தடையின்றித் தொடர்வதை உறுதிப்படுத்தவும் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

போக்குவரத்துத் தேவையைக் குறைப்பதற்காக விரிவுரைகளை இணையவழி ஊடாக நடத்துமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

எரிபொருள் பயன்பாட்டைக் குறைக்கும் நோக்கில், பல்கலைக்கழக கல்விசார் ஊழியர்கள் தற்போது சாத்தியமான இடங்களில் புதன்கிழமைகளில் "வீட்டிலிருந்தே பணிபுரிதல்" முறையைப் பின்பற்றி வருகின்றனர்.

# சுகாதார அமைச்சின் சில பிரிவுகளுக்கு புதன்கிழமைகளில் வீட்டிலிருந்து வேலை

கொழும்பு, மார்ச். 18

நாட்டில் நிலவும் எரிபொருள் நெருக்கடியை குறைக்கும் நோக்கில், சுகாதார அமைச்சின் கீழ் இயங்கும் குறிப்பிட்ட சில திணைக்கள அதிகாரிகள் மற்றும் ஊழியர்களுக்கு வாரந்தோறும் புதன்கிழமைகளில் வீட்டிலிருந்து பணியாற்றுவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

சுகாதார மற்றும் வெகுசன ஊடக அமைச்சின் செயலாளர் அனில் ஜாசிங்க இதற்கான உத்தியோகபூர்வ அறிவிப்பை விடுத்துள்ளார்.

மறு அறிவித்தல் வரை பின்வரும் பிரிவுகளுக்கு இந்த நடைமுறை பொருந்தும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

காசல் வீதியிலுள்ள புதிய அமைச்சுக் கட்டடத்தில் அமைந்துள்ள அனைத்துத் திணைக்களங்கள்.

நாரஹேன்பிட்டியில் அமைந்துள்ள மலேரியா ஒழிப்புத் திட்டத் தலைமையகத்தின் அனைத்துப் பிரிவுகள்.

தேசிய புற்றுநோய் கட்டுப்பாட்டுத் திட்டம்.

சுகாதார மேம்பாட்டுப் பணியகம்.

போக்குவரத்துப் பிரிவு தொடர்பான அத்தியாவசியப் பணிகள் "சுவாசிரிபாயா" கட்டடத்தில் இருந்து மேற்கொள்ளப்பட வேண்டும் என அந்த உத்தரவில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)

# விபச்சார விடுதிகள் சுற்றிவளைப்பு 10 பேர் கைது!

கொழும்பு, மார்ச். 18

பேலியகொட பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை மகாஜ் நிலையங்கள் என்ற போர்வையில் இயங்கிய இரண்டு விபச்சார விடுதிகள் சுற்றிவளைக்கப்பட்டு 10 சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டனர்.

இதன்போது, விபச்சார விடுதிகளை நிர்வகித்ததாக கூறப்படும் 28 வயதுடைய ஆண் ஒருவரும், ஒரு பெண்ணும், மேலும் விபச்சாரத்தில் ஈடுபட்டதாக கூறப்படும் 8 பெண்களும் கைது செய்யப்பட்டனர். (எ)

# சட்டவிரோத மதுபான உற்பத்தி நிலையம் முற்றுகை

## சந்தேகநபர் ஒருவர் கைது

கொழும்பு, மார்ச். 18

மொரகஹஹேன பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஹால்பிட்டிய பகுதியில், சட்டவிரோத மதுபான உற்பத்திக்காக பயன்படுத்தப்பட்ட கோடாவுடன் சந்தேகநபர் ஒருவர் கைது செய்யப்பட்டார்.

மொரகஹஹேன பொலிஸார் நேற்று முன்தினம் திங்கட்கிழமை மாலை மேற்கொண்ட விசேட சோதனை நடவடிக்கையின் போது இந்த சட்டவிரோத மதுபான உற்பத்தி நிலையம் கண்டறியப்பட்டது.

இதன்போது, சட்டவிரோத மதுபான உற்பத்திக்கு பயன்படுத்தப்பட்ட 2,220 லீற்றர் கோடா பொலிஸாரால் கைப்பற்றப்பட்டன. (எ)

# வெவ்வேறு விபத்துக்களில் சிறுவன் உட்பட ஐவர் பலி!

கொழும்பு, மார்ச். 18

நாட்டின் வெவ்வேறு பகுதிகளில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை இடம்பெற்ற விபத்துக்களில் ஐந்து பேர் உயிரிழந்தனர்.

பிலியந்தலை பகுதியில் மாலை லொறி ஒன்று வீதியை கடக்கமுற்பட்ட ஒருவர் மீது மோதி விபத்துக்குள்ளானது. இதில், பெண் பாதசாரி ஒருவர் உயிரிழந்தார்.

விபத்துடன் தொடர்புடைய லொறியின் சாரதி கைது செய்யப்பட்டார்.

இதேவேளை, அத்துருகிரிய பகுதியில் அதிவேக நெடுஞ்சாலை மேம்பால வீதியில் பயணித்த லொறி ஒன்று, எதிரே வந்த மோட்டார் சைக்கிளுடன் மோதி விபத்துக்குள்ளானதில் 14 வயது சிறுவன் உயிரிழந்தார்.

இந்த விபத்துடன் தொடர்புடைய லொறியின் சாரதி கைது செய்யப்பட்டார்.

அக்குரணை - நீருல்ல வீதியில் பயணித்த லொறி ஒன்று, பின்னோக்கி நகர்ந்து வான், ஓட்டோ மற்றும் இரு லொறிகளுடன் மோதியதில் பாரிய விபத்து ஏற்பட்டுள்ளது.

இந்த விபத்தில் காயமடைந்த ஓட்டோ சாரதி உயிரிழந்தார்.

இந்த விபத்துடன் தொடர்புடைய லொறியின் சாரதி கைது செய்யப்பட்டார்.

அத்துடன், யாழ். கொழும்பு துறைமுக வீதியின் நெடுங்குளம் பகுதியில் இடம்பெற்ற வாகன விபத்தில் இரண்டு பேர் உயிரிழந்தனர். (எ)

# கடலலையில் அடித்து செல்லப்பட்ட இரு சுற்றுலாப் பயணிகள் மீட்பு

காலி, மார்ச். 18

காலி - ஹிக்கடுவை கடலில் நீராடச் சென்ற இரு வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் கடல் அலையில் அடித்துச் செல்லப்பட்ட நிலையில், பொலிஸ் உயிர்காப்பு பிரிவினரால் பாதுகாப்பாக மீட்கப்பட்டனர்.

திங்கட்கிழமை காலை கடலில் நீராடிய பெலாரஸ் நாட்டைச் சேர்ந்த 52 வயதுடைய பெண் ஒருவர் கடல் அலையில் அடித்து செல்லப்பட்டார்.

இதன்போது கடற்கரையில் கடமையில் இருந்த பொலிஸார் அவரை மீட்டு அடிப்படை முதலுதவி வழங்கினர்.

இதேவேளை, மாலை, ஹிக்கடுவை கடலில் நீராடச் சென்ற 65 வயதுடைய ரஷ்ய நாட்டைச் சேர்ந்த சுற்றுலாப் பயணி ஒருவரும் கடல் அலையில் அடித்து செல்லப்பட்டார். அவரையும் கடற்கரையில் பணியில் இருந்த பொலிஸார் மீட்டு அடிப்படை முதலுதவி வழங்கினர். (எ)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அத்தியாவசிய பொருட்களின் விலைகள் அதிகரிக்கக்கூடும்

## உணவு பாதுகாப்பு அமைச்சர் எச்சரிக்கை

கொழும்பு, மார்ச். 18

மத்திய கிழக்கில் நிலவி வரும் போர் பதற்றம் காரணமாக, அத்தியாவசிய உணவுப் பொருட்களின் விலைகள் அதிகரிக்கக் கூடும் என்று வர்த்தக மற்றும் உணவுப் பாதுகாப்பு அமைச்சர் வசந்த சமரசிங்க தெரிவித்தார்.

மத்திய கிழக்கில் ஏற்பட்டுள்ள மோதல்கள் காரணமாக, விநியோகப் பாதைகளில் ஏற்பட்டுள்ள சிக்கல்களினால் அத்தியாவசிய உணவுப் பொருட்களின் விலைகள் உயர வாய்ப்புள்ளது என்று அமைச்சர் கூறினார்.

இலங்கையின் உருளைக்கிழங்கில் 80 சதவீதமானவையும் வெங்காயத்தேவையில் 80 சதவீதமானவையும் பருப்புத்தேவையில் 100 சதவீதமானவையும் வெளிநாடுகளில் இருந்தே இறக்குமதி செய்யப்படுகின்றன.

விநியோகச் சங்கிலியில் ஏற்படும் தடைகள் காரணமாக இந்தப் பொருட்களின் விலைகள் அதிகரிக்கக்கூடும்.

எவ்வாறாயினும், சந்தையில் அநியாயமான முறையில் விலைகள் உயர்த்தப்படுவதைத் தடுக்க அரசாங்கம் தன்னால் இயன்ற அனைத்து நடவடிக்கைகளையும் எடுக்கும்.

உருளைக்கிழங்கு, வெங்காயம் மற்றும் பருப்பு போன்ற அத்தியாவசியப் பொருட்களுக்கு நாம் பெருமளவில் இறக்குமதியையே நம்பியிருக்கிறோம்.

எனவே, தற்போதைய சர்வதேச சூழலில் இவற்றின் விலைகள் உயர வாய்ப்புள்ளது. இருப்பினும், முறையற்ற விலை உயர்வைக் கட்டுப்படுத்த அரசு தீவிரமாகச் செயல்படும். - என்றார். (எ)

# தனியார் பாடசாலைகளுக்கும் விடுமுறை வழங்க கோரிக்கை

புதன்கிழமைகளில்

கொழும்பு, மார்ச். 18

ஒவ்வொரு புதன்கிழமையும் அரச விடுமுறை தினமாக அறிவிக்கப்பட்டுள்ளதால், அரச பாடசாலைகளுக்கு விடுமுறை வழங்கப்பட்டுள்ளதை போன்று, அரசினால் அங்கீகரிக்கப்பட்ட தனியார் பாடசாலைகளையும் அன்றைய தினம் நடத்த வேண்டாம் எனக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது என்று கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

சர்வதேச பாடசாலைகளும் இந்த நடைமுறையைப் பின்பற்றுமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது என்று கல்வி அமைச்சின் செயலாளர் நாலக கலுவெவ தெரிவித்தார். (எ)

# போலி வர்த்தக முத்திரையுடன் பீடி தயாரித்த நால்வர் கைது!

நீர்கொழும்பு, மார்ச். 18

பிரபல பீடி நிறுவனமொன்றின் வர்த்தக முத்திரையை சட்டவிரோதமாக பயன்படுத்தி பீடிகள் தயாரித்து சந்தைக்கு விநியோகித்த குற்றச்சாட்டில் நால்வர் கைது செய்யப்பட்டனர்.

நீர்கொழும்பு மாவட்ட குற்றத்தடுப்பு பிரிவினருக்கு கிடைத்த முறைப்பாட்டின் அடிப்படையில் திங்கட்கிழமை இந்தச் சோதனை நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது, போலி வர்த்தக முத்திரையுடன் தயாரிக்கப்பட்ட பெருமளவிலான பீடிகள் கைப்பற்றப்பட்டன. அத்தோடு, சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டனர். பின்னர் அவர்கள் மேலதிக விசாரணைகளுக்காக நீர்கொழும்பு பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டனர். (எ)

# முன்பள்ளிகளை நடத்த வேண்டாம்

கொழும்பு, மார்ச். 18

வாரத்தின் ஒவ்வொரு புதன்கிழமையும் முன்பள்ளிகளை நடத்த வேண்டாம் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளது- இவ்வாறு மகளிர் மற்றும் சிறுவர் விவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

அரச விடுமுறை தினமாக அறிவிக்கப்பட்டுள்ள வாரத்தின் ஒவ்வொரு புதன்கிழமையும் மேலதிக வகுப்புக்கள் மற்றும் விரிவுரைகளை நடத்த வேண்டாம் என அரசாங்கம் அறிவித்துள்ளது.

தற்போது நிலவும் எரிபொருள் நெருக்கடிக்கு மத்தியிலேயே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. இந்த நிலையில், புதன்கிழமைகளில் முன்பள்ளிகளை நடத்த வேண்டாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (எ)

# தோட்டாக்களுடன் இளைஞர் கைது!

காலி, மார்ச். 18

காலி - பட்டபொல பகுதியில், போலி இலக்கத் தகடு பொருத்தப்பட்ட மோட்டார் சைக்கிள் மற்றும் தோட்டாக்களுடன் இளைஞன் ஒருவர் கைது செய்யப்பட்டார்.

நேற்று முன்தினம் மதியம் காலி மாவட்ட குற்றத்தடுப்புப் பிரிவின் அதிகாரிகளுக்குக் கிடைத்த இரகசியத் தகவலுக்கு அமைய மேற்கொள்ளப்பட்ட சோதனையின் போதே இந்தக் கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது, சந்தேக நபரிடமிருந்து போலி இலக்கத் தகடு பொருத்தப்பட்ட மோட்டார் சைக்கிள், 9 மில்லி மீற்றர் ரக 09 தோட்டாக்கள், 01 கிராம் 800 மில்லி கிராம் ஐஸ் போதைப் பொருள் என்பன கைப்பற்றப்பட்டன.

சந்தேகநபர் வதுரவில பகுதியைச் சேர்ந்த 25 வயதுடைய இளைஞன் என அடையாளம் காணப்பட்டுள்ளார். (எ)

# நீண்டகாலம் தலைமறைவாகவிருந்த மரண தண்டனை குற்றவாளி கைது!

கொழும்பு, மார்ச். 18

கொலை மற்றும் கப் ரக வாகன கடத்தல் சம்பவம் தொடர்பில் மரண தண்டனை விதிக்கப்பட்டு, நீண்டகாலமாக தலைமறைவாக இருந்த குற்றவாளி ஒருவர் எல்பிட்டி பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

எல்பிட்டி - திவிதுருவத்த பகுதியில் கடந்த 2003 மார்ச் 05ஆம் திகதி, நபர் ஒருவரை கொலை செய்து, அவரிடமிருந்த கப் ரக வாகனமொன்றை கொள்ளையிட்ட சம்பவம் தொடர்பில் குறித்த நபருக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

குறித்த வழக்கை விசாரித்த பலபிட்டிய மேல் நீதிமன்றம், குறித்த நபரை குற்றவாளியாகக் கண்டு அவருக்கு மரண தண்டனை விதித்து தீர்ப்பளித்திருந்தது.

மரண தண்டனை விதிக்கப்பட்டதிலிருந்து குறித்த நபர் நீதிமன்றில் முன்னிலையாகாது தலைமறைவாக இருந்து வந்துள்ளார்.

இந்த நிலையில், எல்பிட்டி பொலிஸ் அதிகாரிகளுக்கு கிடைத்த இரகசியத் தகவலுக்கு அமைய, திங்கட்கிழமை மாலை பத்தினிகமுவ பகுதியில் குறித்த நபர் கைது செய்யப்பட்டார். (எ)

# இதுவரை மின் துண்டிப்பு அமுல்படுத்தப்படவில்லை

கொழும்பு, மார்ச். 18

நாட்டில் நிலவும் எரிபொருள் நெருக்கடிக்கு மத்தியில் இதுவரை மின் துண்டிப்பு அமுல்படுத்தப்படவில்லை. இருப்பினும், எதிர்காலத்தில் மின்சாரத்தைத் துண்டிக்க வேண்டிய நிலை ஏற்படக்கூடும் என்று வலுசக்தி அமைச்சர் குமார ஜயக்கொடி தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவால் மின் துண்டிப்பு அமுல்படுத்தப்படுமா? என எழுப்பப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கும் போதே அமைச்சர் இவ்வாறு பதிலளித்தார்.

"இதுவரை ஒரு மணிநேரம் கூட மின்வெட்டு இன்றி நாம் கொண்டு செல்கிறோம், ஆனால், மின்சாரத்தைத் துண்டிக்க வேண்டிய ஒரு காலம் வரவும் கூடும்." - என்றார். (எ)

# "ஆசியாவிலேயே குறைந்த விலையில் இலங்கையில் எரிபொருள் விநியோகம்"

மட்டக்களப்பு, மார்ச். 18

கடந்த ஆட்சிக்காலத்தில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடியின்போது அதனை தமது தேவைக்காக பயன்படுத்திய தரப்பினர் இன்று அரசாங்கத்தின் மீது பொய்ப்பிரசாரங்களை முன்னெடுத்து வருகின்றனர் என்று தேசிய மக்கள் சக்தியின் மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் கந்தசாமி பிரபு தெரிவித்தார்.

வளைகுடா நிலைமையால் ஆசியாவிலேயே அதிக விலையில் எரிபொருள் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

இருப்பினும், மிகக் குறைந்த விலையில் இலங்கையில் மக்களுக்கு எரிபொருள் விநியோகிக்கப்படுகிறது. எரிபொருள் பதுக்கல் செயல்பாடுகளை தடுப்பதற்கு கியூ.ஆர். முறை பயன்பாட்டுக்கு கொண்டுவரப்பட்டுள்ளது. பதுக்கல் செயல்பாடுகளை தடுக்கும் வகையிலேயே இது கொண்டுவரப்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.

கிளீன் சிறீலங்கா வேலைத் திட்டத்தின் கீழ் தேசத்தை கட்டியெழுப்புகின்ற வளமான கிராமம்- சமூக உற்பத்திக்கான மாதிரி கிராமங்களுக்கான அங்குரார்ப்பண நிகழ்வு மட்டக்களப்பு மாவட்டத்தின் 14 பிரதேச செயலாளர் பிரிவுகளிலும் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

மட்டக்களப்பு மாவட்டத்தின் பிரதான நிகழ்வு மட்டக்களப்பு மண்முனை வடக்கு பிரதேச செயலகத்தின் சத்துருக்கொண்டான் கிராம உத்தியோகத்தர் பிரிவுக்குட்பட்ட லங்காபுரம் கிராமத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது. இதில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (எ)

# மாங்காடு சமூக உற்பத்தி திறன் மாதிரி கிராம திட்டம் ஆரம்பம்

மட்டக்களப்பு, மார்ச். 18



மண்முனை தென் எருவில் பற்று பிரதேச செயலக பிரிவில் தெரிவுசெய்யப்பட்ட மாங்காடு சமூக உற்பத்தித் திறன் மாதிரி கிராமத் திட்ட அங்குரார்ப்பண நிகழ்வு நேற்று முன்தினம் திங்கட்கிழமை பிரதேச செயலாளர் உ. உதயசிறீதர் தலைமையில் மாங்காடு சரஸ்வதி வித்தியாலயத்தில் நடைபெற்றது. (எ-09)

# வேகக் கட்டுப்பாட்டையிழந்த லொறி மண்மேட்டில் மோதியது

நுவரெலியா, மார்ச்.18



நானுஓயா பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ரதல்ல குறுக்கு வீதியில் திங்கட்கிழமை மாலை லொறி ஒன்று செங்குத்தான வளைவு ஒன்றில் கட்டுப்பாட்டை இழந்து மண்மேட்டில் மோதி விபத்துக்குள்ளானது.

நுவரெலியாவில் இருந்து ஹற்றன் நோக்கிப் பயணித்துக் கொண்டிருந்த லொறியில் திடீரென ஏற்பட்ட இயந்திர கோளாறு காரணமாக சாரதிக்கு வாகனத்தை கட்டுப்படுத்த முடியாத காரணத்தால் இந்த விபத்து நேர்ந்தது.

எனினும், சிறு காயங்களுடன் அதிர்ஷ்டவசமாக இந்த விபத்தில் உயிர் தப்பியுள்ளனர். விபத்தில் லொறி கடுமையான சேதத்துக்குள்ளானதாக தெரிவித்த நானுஓயா பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (எ)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நாட்டை நெருக்கடியில்...

ஊடாகச் சாதகமான பதில்கள் கிடைத்துள்ளன. இதனைத் தொடர்ந்து புதிய விநியோகஸ்தர்களுக்குக் கொள்வனவு கட்டளைகள் அனுப்பப்பட்டுள்ளன.

குறிப்பாக, டொலர்களில் வருமானம் ஈட்டும் தனியார் ஏற்றுமதித் தொழில்துறை மற்றும் சுற்றுலாத்துறை சங்கங்களின் கோரிக்கைக்கு அமைய அவர்களுக்கு தேவையான எரிபொருளை அவர்களே இறக்குமதி செய்ய அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டுள்ளது.

அதன்படி இன்று முதல் தனியார் துறை மூலம் சுற்றுலாத்துறைக்கும் இந்த ஏற்றுமதி நிறுவனங்களுக்குமான எரிபொருள் வழங்கப்படும் என ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

அதேநேரம், நாட்டில் எரிவாயு தட்டுப்பாடு ஏற்படாது என உறுதியளித்த ஜனாதிபதி, மார்ச் மாதத் தேவையான 330,000 தொன்களுக்கு மேலதிகமாக 380,000 தொன்கள் இறக்குமதி செய்யப்பட்டுள்ளதாகக் குறிப்பிட்டார்.

மேலும் 33,000 தொன் எரிவாயு தாங்கிய கப்பல் இன்று அல்லது நாளை நாட்டை வந்தடையவுள்ளது எனவும் அவர் கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

அத்துடன், சுகாதார சேவை, விமான நிலையம் மற்றும் துறைமுகம் போன்ற அத்தியாவசிய தேவைகளுக்காகப் பாதுகாப்பு எரிபொருள் இருப்புகளைப் பேணுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதோடு, விவசாய நடவடிக்கைகளுக்கான எரிபொருள் ஒதுக்கீட்டை அதிகரிக்கவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதனிடையே, பெருந்தோட்டத் துறையில் தேயிலைத் தோட்டப் பயன்பாடுகளுக்கு கியூ.ஆர். முறைமையின் கீழ் வழங்கப்படும் ஒதுக்கீடு போதாதெனில், அவர்களுக்கு மேலதிக எரிபொருள் வழங்கப்படும். உணவு விநியோக வலையமைப்பு பாதிக்கப்படாமல் இருப்பதை உறுதி செய்ய, அத்தியாவசிய உணவு மற்றும் மரக்கறி விநியோகஸ்தர்களுக்கான எரிபொருள் விநியோகமும் உறுதிப்படுத்தப்படும்.

அதேநேரம், அரசாங்கத்தின் எரிபொருள் பாவனையைக் குறைந்தபட்சம் 25 சதவீதத்தினால் குறைக்கும் நோக்கில், அரச பணியாளர்களுக்கு வாராந்தம் புதன்கிழமைகளில் விடுமுறை வழங்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

நாட்டில் நெருக்கடியைத் தவிர்ப்பதற்கான அனைத்து முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளையும் அரசாங்கம் எடுத்துள்ளது. எனவே பொதுமக்கள் எவரும் இது குறித்து அச்சமடையத் தேவையில்லை-என்றார். (அ)

## உலக உணவு...

கருத்துத் தெரிவித்த அந்த அமைப்பின் பிரதி நிறைவேற்றுப் பணிப்பாளர் கார்ல் ஸ்காவ், இது தொடர்பான அதிர்ச்சியூட்டும் தகவல்களை வெளியிட்டுள்ளார்.

குறித்த மோதல்கள் காரணமாக உலகளாவிய ரீதியில், விநியோகச் சங்கிலி பாதிக்கப்படுவதால் அத்தியாவசிய உணவுப் பொருட்களின் விலை அதிகரிப்பு.

மும்முனைப் போர் காரணமாக மசகு எண்ணெய் விலையில் ஏற்படும் சடுதியான மாற்றம்.

ஹோர்முஸ் நீரிணை போன்ற முக்கிய கடல் வழிப்பாதைகளில் நிலவும் பதற்றம் காரணமாக போக்குவரத்துச் செலவுகள் அதிகரித்தல். போன்ற துறைகளில் ஏற்படும் விலையேற்றமே இந்தப் பாரிய உணவுத் தட்டுப்பாட்டுக்குக் காரணமாக அமையும் என அவர் சுட்டிக்காட்டினார்.

தற்போது உலகளவில் 319 மில்லியன் மக்கள் கடும் பசி மற்றும் ஊட்டச்சத்துக் குறைபாட்டினால் பாதிக்கப்பட்டுள்ளனர். இதுவே இதுவரை பதிவான மிக உயர்ந்த எண்ணிக்கையாகும்.

இந்த நிலையில், இந்தத் தற்போதைய போர்ச் சூழல் காரணமாக மேலும் 45 மில்லியன் மக்கள் இந்தப் பட்டியலில் இணைந்தால், உலகளாவிய உணவுப் பாதுகாப்பு பெரும் அச்சுறுத்தலுக்கு உள்ளாகும் என கார்ல் ஸ்காவ் கவலை வெளியிட்டுள்ளார். (அ)

## அமைச்சருக்கு...

நேற்று செவ்வாய்க்கிழமை நடைபெற்ற கட்சியின் பாராளுமன்றக் குழுக் கூட்டத்திலேயே இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது. மூன்று பிரதான காரணங்களை அடிப்படையாகக் கொண்டு இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

அமைச்சர் மீதான நிலக்கரி மோசடிக் குற்றச்சாட்டுக்கள் தொடர்பாக இதுவரை போதுமான அல்லது வலுவான ஆதாரங்கள் முன்வைக்கப்படாமை.

வலுசக்தி அமைச்சருக்கு எதிராக ஏற்கனவே நீதிமன்றத்தில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டுள்ளதால், அது தொடர்பான சட்ட நடவடிக்கைகள் ஒருபுறம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றமை.

நாட்டில் தற்போது பாரிய எரிபொருள் நெருக்கடி நிலவும் சூழலில், இவ்வாறானதொரு நம்பிக்கையில்லாப் பிரேரணை அரசியல் ரீதியான குழப்பங்களை ஏற்படுத்தி, பொதுமக்களை மேலும் அசௌகரியங்களுக்கு உள்ளாக்கக்கூடும் என்ற அச்சம்.

இந்தக் காரணிகளின் அடிப்படையில், எதிர்க்கட்சியினால் முன்மொழியப்பட்டுள்ள இந்தப் பிரேரணைக்குத் தமது ஆதரவை வழங்கப் போவதில்லை எனத் தமிழரசுக் கட்சி உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளது. (அ)

## பொருளாதார...

செய்வதற்கும், தற்போதைய சூழலில் அரசாங்க சேவைகளை எவ்வித இடையூறுமின்றி தொடர்ச்சியாக முன்னெடுத்துச் செல்வதை உறுதி செய்வதற்கும் நாட்டின் மின்சாரம் மற்றும் எரிபொருள் உள்ளிட்ட வலுசக்தி தேவைகளை தட்டுப்பாடின்றி பூர்த்தி செய்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கும் இந்த குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளன.

இதனூடாக, எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்து தற்போது விரிவாக ஆராயப்பட்டு வருவதாகவும், போர் சூழலால் ஏற்படக்கூடிய பாதிப்புகளில் இருந்து மக்களைப் பாதுகாப்பதற்கான அனைத்து திட்டங்களும் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் பிரதமர் மேலும் குறிப்பிட்டார். (அ)

## சுதந்திர தினத்தன்று...

பணிக்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து மாணவர்கள் மத்தியில் குழப்பமானதொரு நிலை எழுந்துள்ளது. பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் இது பற்றி ஆராய்ந்து வருகிறது.

இது தொடர்பாகக் கடந்த 13 ஆம் திகதி யாழ். மாவட்டக் குற்றத்தடுப்புப் பிரிவுப் பொறுப்பதிகாரியினால், யாழ். பல்கலைக்கழகப் பதிவாளருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள கடிதத்தின் முழு விவரம் அதிலுள்ளவாறே கீழே தரப்பட்டுள்ளது: -

"2026.02.04ம் திகதி நடத்தப்பட்ட தேசிய சுதந்திர தினத்திற்கு யாழ்ப்பாணம் பல்கழைகலகத்தில் உயர்த்தப்பட்டு காணப்பட்ட தேசிய கொடியினை யாழ்ப்பாம் சிரேஸ்ட மாணவர் சங்கத்தின் தலைவர் மற்றும் கலைபிரிவு சங்கத்தின் தலைவர உட்பட்ட மாணவர்கள் சிலர் மூலம் அந்த தேசிய கொடியினை நிலத்தில் எறிந்து கருப்பு நிற கொடியினை உயர்த்தியது தொடர்பாக கௌரவ பொலிஸ்பதி ஐயாவின் கட்டளை மற்றும் யாழ்ப்பாணம் மாவட்ட சிரேஸ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஐயாவின் கட்டளை மற்றும் ஆலோசனைக்க அமைய எனது காரியாலயத்தினால் மேற்கொள்ளப்படும் விசாரணை தொடர்பாக வாக்குமூலம் பெறுவதற்கு கீழ் பெயர் குறிப்பிட்ட மாணவர்களை 2026.03.16ம் திகதி காலை 09.30 யாழ்ப்பாணம் மாவட்ட குற்றத்தடுப்பு பிரிவின் அனுப்புவதற்கு தேவையான நடவடிக்கையினை மேற்கொண்டு தருமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

(01). தரமலிங்கம் ஜதுர்சன் தே.அ.அ.இல 20028001286 (2021/A/422) கலைபிரிவுச் சங்க தலைவர்

(02). தயாபரன் லஜிதரன் தே.அ.அ.இல 200111500026 சிரேஷ்ட மாணவர் சங்க தலைவர்

(03) ஏ. அபிசேக் (2022/A/506)"

கடிதம் ஒழுக்காற்று அதிகாரியினால் கையளிக்கப்பட்ட போதிலும் மாணவர்களை பொலீஸ் நிலையம் செல்லுமாறு கட்டாயப்படுத்த முடியாதென்றும், பதிவாளருக்கு முகவரியிடப்பட்ட கடிதத்தோடு மாணவர்கள் எப்படிச் செல்ல முடியும் என்றும் மாணவர்கள் குறிப்பிடுகின்றனர். (ஒ)

## இலஞ்ச ஊழல்...

முன்னிலையாகியிருந்த முன்னாள் ஜனாதிபதி கோட்டா பய ராஜபக்ஷ, தனது வாக்குமூலத்தை வழங்கிய பின்னர் அங்கிருந்து வெளியேறினார். முன்னெடுக்கப்பட்டு வரும் விசாரணை ஒன்று தொடர் பாக வாக்குமூலம் வழங்குவதற்காகவே அவர் ஆணைக் குழுவுக்கு அழைக்கப்பட்டிருந்தார். அவர் சுமார் இரண்டரை மணிநேரம் வாக்கு மூலம் வழங்கியதன் பின்னர் அங்கிருந்து வெளியேறினார். (அ)

## எரிபொருள் நெருக்கடி...

புதன்கிழமைகளில் மேற்கொள்ளப்படவேண்டிய பணிகள் அதே வாரத்தின் செவ்வாய்க்கிழமைகளில் மேற்கொள்ளப்பட வேண்டும்.

அவசியமான சந்தர்ப்பங்களில் மாத்திரம் நிறுவனத் தலைவரின் தீர்மானத்திற்கு அமைய உத்தியோகத்தர்களை பணிக்கு அழைக்க முடியும்.

தொழில்நுட்ப வசதிகள் உள்ள திணைக்களங்களில், உத்தியோகத்தர்கள் அலுவலகத்திற்கு நேரில் வராமல் வீட்டிலிருந்தே பணியாற்றுவதற்கான ஏற்பாடுகளை நிறுவனத் தலைவர்கள் மேற்கொள்ளமுடியும்.

இந்த விடுமுறை அறிவிப்பானது அத்தியாவசிய சேவைகளை வழங்கும் நிறுவனங்களுக்குப் பொருந்தாது.

அமைச்சின் செயலாளர், மாகாண தலைமைச் செயலாளர் அல்லது நிறுவனத் தலைவரினால் அத்தியாவசியமானது எனத் தீர்மானிக்கப்படும் நிறுவனங்கள் புதன்கிழமைகளில் வழமை போல இயங்கும்.

ஏற்கனவே சுழற்சி முறை அடிப்படையில் இயங்கும் நிறுவனங்களுக்கும் இந்தச் சுற்றறிக்கை பொருந்தாது.

அரச நிறுவனங்களினால் ஏற்பாடு செய்யப்படும் விழாக்கள், மாநாடுகள் மற்றும் நிகழ்வுகளை நடத்துவதைத் தவிர்க்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

மின்சாரம் மற்றும் எரிபொருளை சிக்கனமாகப் பயன்படுத்துவது தொடர்பான 04/2022 இலக்க சுற்றறிக்கை அறிவுறுத்தல்களைக் கண்டிப்பாகப் பின்பற்றுமாறு வலியுறுத்தப்பட்டுள்ளது.

பாடசாலைகள் மற்றும் கல்வி நிறுவனங்களின் செயல்பாடுகள் குறித்து கல்வி அமைச்சின் செயலாளர் மேலதிக அறிவுறுத்தல்களை வழங்குவார். நீதித் துறை சார்ந்த உத்தியோகத்தர்களைப் பணிக்கு அழைப் பது தொடர்பாக நீதிச் சேவை ஆணைக்குழு தேவையான வழிகாட்டல்களை வழங்கும்.

மேலும், "டித்வா" சூறாவளி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் அவசர பணிகளுக்காக உத்தியோகத்தர்களை அழைக்கும் அதிகாரம் அந்தந்த மாவட்டச் செயலாளர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக அந்த சுற்றறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

## பொதுப் போக்குவரத்து...

ஆணையாளர் நாயகம் பிரபாத் சந்திரகீர்த்தி தெரிவித்துள்ளார்.

மட்டுப்படுத்தப்பட்ட போக்குவரத்து வசதிகள் வழங்கப்படுவதால், பொதுமக்கள் அத்தியாவசியத் தேவைகளுக்காக (உதாரணமாக மருத்துவமனைக்குச் செல்லுதல்) மட்டுமே பொதுப் போக்குவரத்தைப் பயன்படுத்துமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர்.

புதன்கிழமைகளில் பயணங்களைக் குறைத்துக் கொள்ளுமாறு தனியார்துறையினரிடமும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. இலங்கை வர்த்தக சபை மற்றும் முதலாளிமார் சம்மேளனம் ஆகியவற்றுடன் பேச்சு நடத்தப்பட்டுள்ளது.

சாத்தியமான இடங்களில் தனியார் நிறுவன ஊழியர்களை வீட்டிலிருந்தே பணிபுரிய அனுமதிக்குமாறு வலியுறுத்தப்பட்டுள்ளது. இது பொதுப் போக்குவரத்துக்கான கேள்வியைக் குறைக்க உதவும் என எதிர்பார்க்கப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புதன்கிழமைகளை பொது விடுமுறை தினங்களாக அறிவித்ததன் மூலம் எதிர்பார்க்கப்படும் மக்களின் நடமாட்டக் குறைப்புக்கு இணங்க, வரையறுக்கப்பட்ட போக்குவரத்து சேவைகளை மிகவும் அத்தியாவசியமான தேவைகளுக்கு மாத்திரம் ஒதுக்குவதே இந்த நடவடிக்கையின் முக்கிய நோக்கமாகும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

## சாதாரண...

எரிபொருள் மற்றும் நிலக்கரியைக் கொள்முதல் செய்ய அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

இலங்கை தனது மசகு எண்ணெய், பெற்றோலியப் பொருள்கள், சமையல் எரிவாயு மற்றும் நிலக்கரித் தேவைகளுக்காக முழுமையாக இறக்குமதியையே சார்ந்துள்ளது.

தற்போதைய சர்வதேச சூழலால் எரிசக்தி விநியோகத்தில் கப்பல் வருகைகள் ரத்து செய்யப்படுதல், காப்புறுதி நிறுவனங்கள் காப்புறுதி வழங்க மறுத்தல் அல்லது தாமதித்தல் போன்ற நேரடி அச்சுறுத்தல்கள் ஏற்பட்டுள்ளன.

இந்த நிலையில், தடையற்ற எரிசக்தி விநியோகத்தை உறுதிப்படுத்துவதற்காக, தேசிய கொள்முதல் ஆணைக்குழுவுடன் கலந்தாலோசித்து இந்தத் தற்காலிக ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இதன்படி, எதிர்வரும் மூன்று மாதங்களுக்கு நடைமுறையிலுள்ள வழமையான கொள்முதல் விதிகளுக்குப் புறம்பாக, அவசரத் தேவைகளைக் கருத்திற் கொண்டு எரிபொருள் மற்றும் நிலக்கரியைக் கொள்முதல் செய்ய வழிவகை செய்யப்பட்டுள்ளது.

## பாராளுமன்றம்...

அறிவிக்கப்பட்டுள்ள நிலையில், இந்தநடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பாராளுமன்ற தொடர்பாடல் திணைக்களம் தெரிவித்துள்ளது. (அ)

## பாடசாலைகளுக்கு...

மேற்கொண்டுள்ளது.

கல்வி அமைச்சின் செயலாளர் நாலக கலுவெவவின் கையொப்பத்துடன் இது தொடர்பான முக்கிய அறிவுறுத்தல்கள் வெளியிடப்பட்டுள்ளன.

அதன்படி. பாடசாலை மாணவர்களின் பங்கேற்புடன் ஏற்கனவே திட்டமிடப்பட்டிருந்த கல்விச் சுற்றுலாக்கள் மற்றும் எதிர்காலத்தில் திட்டமிடப்படவுள்ள அனைத்துச் சுற்றுலாக்களும் மறு அறிவித்தல் வரை தற்காலிகமாக இடைநிறுத்தப்பட வேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது.

அத்துடன், பாடசாலைகளில் நடத்தப்படும் விழாக்கள் அல்லது நிகழ்ச்சிகளின்போது எரிபொருள் பாவனையைக் கட்டுப்படுத்துமாறு அதிபர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. குறிப்பாக, அதிகளவில் எரிபொருள் செலவாகும் வாகனப் பேரணிகள் போன்றவற்றை நடத்துவது தற்காலிகமாகத் தடை செய்யப்பட்டுள்ளது.

அதேநேரம், பாடத்திட்டங்களை முடிப்பதற்கான காலம் குறைவாக இருப்பதால், பாடசாலை நேரத்தை விழாக்கள் அல்லது வெளி நிறுவனங்களின் நிகழ்ச்சிகளுக்காகப் பயன்படுத்துவதைத் தவிர்க்குமாறு கோரப்பட்டுள்ளது.

மேலும், தற்போது நிலவும் சூழலால் பாடசாலைகள் வாரத்திற்கு நான்கு நாட்கள் மட்டுமே இயங்கும். இதன்படி, மீண்டும் அறிவிக்கும் வரை ஒவ்வொரு புதன்கிழமையும் பாடசாலை விடுமுறை தினமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

புதன்கிழமைகளில் மாணவர்கள் வீட்டில் இருந்தபடியே சுயகற்றல் செயற்பாடுகளில் ஈடுபடுவதற்கான மேலதிக பயிற்சிகள் மற்றும் வழிகாட்டல்களை வழங்க அதிபர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இந்த நடைமுறைகள் நேற்று முதல் அமுலுக்கு வரும் வகையில் அறிவிக்கப்பட்டுள்ளன. நிலைமை சீரடைந்ததும் பாடசாலைகளை வழமை போல நடத்துவது குறித்த மேலதிக அறிவுறுத்தல்கள் வழங்கப்படும் என கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது. (அ)

## திருகோணமலை...

ஐக்கிய தேசியக் கட்சி யின் தலைவர் வஜிர அபேவர்தன தெரிவித்துள்ளார்.

தற்போது நாட்டில் நிலவும் எரிபொருள் நெருக்கடி குறித்து ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

வஜிர அபேவர்தன தனது உரையில், ரணில் விக்கிரமசிங்கவின் ஆட்சிக் காலங்களில் முன்னெடுக்கப்பட்ட முயற்சிகளை வரிசைப்படுத்தினார்:

2002-2004 காலப்பகுதியில் ரணில் விக்கிரமசிங்கவின் அரசாங்கம் இந்தத் தாங்கிகளை புனரமைக்க நடவடிக்கை எடுத்தபோது, ஜே.வி.பி நாடு முழுவதும் போலி அச்சத்தை ஏற்படுத்தி அந்தப் பணிகளை முடக்கியது.

2015-2020 காலப்பகுதியில் பிரதமராக இருந்த ரணில் விக்கிரமசிங்க, இந்திய அரசாங்கத்தின் ஒத்துழைப்புடன் இந்தத் தாங்கிகளை அபிவிருத்தி செய்ய முயன்றார். அப்போதும் ஜே.வி.பியின் அழுத்தங்களால் அந்த முயற்சி கைவிடப்பட்டது.

2022-2024 காலப்பகுதியில் ஜனாதிபதியாக இருந்தபோது அவர் எடுத்த முயற்சியும் ஜே.வி.பியின் எதிர்ப்புப் போராட்டங்களினால் தோல்வியடைந்தது.

இந்த மூன்று சந்தர்ப்பங்களில் ஒன்றிலாவது இந்தத் தாங்கிகள் அபிவிருத்தி செய்யப்பட்டிருந்தால், தற்போது ஏற்பட்டுள்ள உலகளாவிய நெருக்கடியின்போது இலங்கைக்குத் தேவையான எரிபொருளைச் சேமித்து வைத்திருக்க முடிந்திருக்கும் என வஜிர அபேவர்தன சுட்டிக்காட்டினார்.

இந்தத் தாங்கிகளின் உரிமை யாரிடம் இருந்தாலும், அவசர காலங்களில் அதில் சேமிக்கப்படும் எரிபொருள் இலங்கையர்களுக்கே சொந்தமாகும்.

அந்தத் தாங்கிகளைப் பயன்படுத்தியிருந்தால் இன்றைய நெருக்கடியை மிக இலகுவாகக் கையாண்டிருக்கலாம். இந்த மூன்று பொன்னான வாய்ப்புகளையும் சீர்குலைத்த ஜே.வி.பிக்கு இன்று அதன் கர்மவினை பலித்துள்ளது என அவர் மேலும் தெரிவித்தார். (அ)

ஈழநாடு
Eelanadu

# ஏப்ரல் முதல் மின்வெட்டு?

## சஜித் பிரேமதாஸ எச்சரிக்கை

கொழும்பு, மார்ச் 18

இலங்கையில் மீண்டும் மின்வெட்டு அமுல்படுத்தப்படக்கூடிய அபாயம் ஏற்பட்டுள்ளதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ எச்சரிக்கை விடுத்துள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று உரையாற்றிய அவர், நுரைச்சோலை மின் உற்பத்தி நிலையத்தில் கடந்த சில நாள்களாக மின் உற்பத்தி கணிசமாகக் குறைந்துள்ளதைச் சுட்டிக்காட்டினார்.

இதற்கான தரவுகளையும் அவர் சபையில் முன்வைத்தார்.

மார்ச் 13: 130 மெகாவோட் குறைவு
மார்ச் 14: 135 மெகாவோட் குறைவு
மார்ச் 15: 132 மெகாவோட் குறைவு
மார்ச் 16: 148 மெகாவோட் குறைவு

இவ்வாறு நுரைச்சோலையில் ஏற்படும் மின் உற்பத்தி வீழ்ச்சியை ஈடுகட்ட, டீசல் மின் நிலையங்களை நாட வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது. இருப்பினும், நிலவும் எரிபொருள் தட்டுப்பாடு காரணமாக இந்த மாற்று வழியிலும் சிக்கல்கள் எழுந்துள்ளன.

இந்த நிலைமை தொடருமாயின், எதிர்வரும் ஏப்ரல், ஜூன் மற்றும் ஜூலை மாதங்களில் நாடு தழுவிய ரீதியில் மின்வெட்டை அமுல்படுத்த வேண்டிய



துரதிர்ஷ்டவசமான சூழல் உருவாகலாம் என அவர் தெரிவித்தார்.

இந்த அபாயகரமான நிலையைத் தவிர்க்க அரசாங்கம் உடனடியாகத் தீர்வைக் காணவேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார். (அ)

# 51 இலட்சத்திற்கும் அதிகமான வாகனங்கள் எரிபொருள் கியூ.ஆர். முறைமையில் பதிவு!

## டிஜிற்றல் பொருளாதார அமைச்சு தகவல்

கொழும்பு, மார்ச் 18

நாட்டில் மீண்டும் அமுல்படுத்தப்பட்டுள்ள எரிபொருள் கியூ.ஆர். குறியீடு முறைமையின் கீழ் இதுவரை 51 இலட்சத்திற்கும் அதிகமான வாகனங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளதாக டிஜிற்றல் பொருளாதார பிரதி அமைச்சர் எரங்க வீரரத்ன நேற்று பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

இது குறித்து அவர் வழங்கிய முக்கிய விவரங்கள் வருமாறு -

இதுவரை 5,103,991 வாகனங்கள் இந்த முறைமையின் கீழ் வெற்றிகரமாகப் பதிவு செய்யப்பட்டுள்ளன. நேற்றுக் காலை 9.00 மணி நிலவரப்படி, இதற்கு முன்னர் கியூ.ஆர். முறைமையைப் பயன்படுத்தாத 439,997 புதிய வாகனங்கள் புதிதாகப் பதிவு செய்யப்பட்டுள்ளன.

தற்போது 5,094,566 பேர் இந்த முறைமையினைப் பயன்படுத்தி எரிபொருளைப் பெற்று வருகின்றனர் - என்றார்.

இந்த கியூ.ஆர். முறைமையில் நிலவிய தொழில்நுட்பக் கோளாறுகள் மற்றும் குறைபாடுகள் குறித்து கருத்துத் தெரிவித்த பிரதி அமைச்சர், முறைமையிலிருந்த 95 வீத குறைபாடுகள் தற்போது சரிசெய்யப்பட்டுள்ளதாகக் குறிப்பிட்டார். (அ)

## மத்திய கிழக்கு மோதலால்

# சுற்றுலாத்துறைக்குத் தினசரி 5 இலட்சம் டொலர்கள் இழப்பு

கொழும்பு, மார்ச் 18

மத்திய கிழக்கில் தீவிரமடைந்து வரும் போர்ச் சூழல் காரணமாக இலங்கையின் சுற்றுலாத்துறை பாரிய பின்னடைவைச் சந்தித்துள்ளதாக இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையின் சிரேஷ்ட அதிகாரி ஒருவர் எச்சரித்துள்ளார்.

இந்த மோதல் நிலைமையால் நாட்டின் சுற்றுலாத்துறைக்கு நாள் ஒன்றுக்கு சுமார் 5 இலட்சம் அமெரிக்க டொலர்கள் வருமான இழப்பு ஏற்படும் அபாயம் உருவாகியுள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளது.

போர் ஆரம்பமானது முதல் இலங்கைக்கு வரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கையில் நாளொன்றுக்கு 2,500 முதல் 3,000 வரை வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது.

2026 மார்ச் மாதத்தின் முதல் எட்டு நாட்களில் 47,646 சுற்றுலாப் பயணிகளே வருகை தந்துள்ளனர். இது 2025 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் 30 வீத வீழ்ச்சியாகும்.

மத்திய கிழக்கு வான்பரப்புகள் மூடப்பட்டுள்ளமை சர்வதேச விமானப் போக்குவரத்துத் துறையில் கடும் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது.

தனது ஐரோப்பிய நாடுகளுக்கான பயணங்களுக்கு மத்திய கிழக்கு வான்பரப்பிற்குப் பதிலாக, ஆப்கானிஸ்தான் மற்றும் அஸர்பைஜான் ஊடாக மாற்றுப் பாதைகளைப் பயன்படுத்த சிறீலங்கன் எயார்லைன்ஸ் நடவடிக்கை எடுத்துள்ளது. இது பயண நேரம் மற்றும் எரிபொருள் செலவுகளை அதிகரிக்கக்கூடும் எனவும் எச்சரிக்கப்பட்டுள்ளது. (அ)

# மாற்று பொறிமுறையே எமக்கு வலுச்சேர்க்கும்

## கூறுகிறார் டக்ளஸ்

யாழ்ப்பாணம், மார்ச் 18

மாற்றுக் கொள்கையும் மாற்று வேலைத் திட்டமுமே எமது பொறிமுறையாகும். அதுவே இன்று நிஜமாகியும் இருக்கின்றது என ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

வேலணை பிரதேச சபையின் உறுப்பினர்கள், பொறுப்பாளர்கள், செயற்பாட்டாளர்களுடனான சந்திப்பில் இவ்வாறு கூறிய அவர் மேலும் கூறுகையில் -

அன்று நாம் மாற்றுக் கொள்கையுடன் மக்களின் அபிலாசைகளுக்காக திட்டங்களை முன்னெடுத்த போது இதர தமிழ் தரப்பினர் ஏழனமாக பார்த்தனர். தமிழ் அரசியல் தலைமைகள் தம்மை பாதுகாக்கவும் இருப்பை தக்கவைக்கவும் தவறானதும் சாதகமற்றதுமான வழிமுறைக்கு சாமரம் வீசியதன் விழைவுகளை மக்களே அனுபவிக்க நேர்ந்தது.

இலங்கை இந்திய ஒப்பந்தத்தின் பின்னர் குணாம்சமான மாற்றம் தென்னிலங்கையில் ஏற்பட்டபோதும் அன்றிருந்த தமிழர் தரப்பில் அது ஏற்படாதிருந்ததன் விழைவாக கிடைக்கவிருந்த தீர்வுகளும் கைநழுவுச் சென்றுவிட்டன.

மக்களது உணர்வுபூர்வமான தேவைகளை உணர்ந்து அதை நிறைவேற்றசாதகமான வழிமுறைகளை முன்னகர்த்துவது அவசியம். இதையே நாம் தொடர்ச்சியாக முன்னெடுத்து வருகின்றோம். இதேநேரம் தென்னிலங்கை கட்சிகளின் நேரடிப் பிரதிநிதிகளாக பாராளுமன்றம் செல்வோர் அக்கட்சிகளின் நிகழ்ச்சி நிரலுக்கேற்ற வகையில் தான் செயற்பட முடியும். அவர்கள் தன்னிச்சையாக செயற்பட முடியாது. ஆனால் ஈ.பி.டி.பி அவ்வாறானதொன்றல்ல.

இதுவே எமக்கான தனித்துவம். எமது இந்த தனித்துவம் மத்தியில் கூட்டாட்சி மாநித்தில் சுயாட்சி என்ற நிலைப்பாட்டில் இருந்தே நாம் முன்னெடுத்து வந்திருக்கின்றோம்-என்றார். (அ)

# எரிபொருள் கையிருப்பு விவரத்தை நேற்று சபையில் வெளியிட்ட வலுசக்தி அமைச்சர்!

கொழும்பு, மார்ச் 18

நாட்டின் தற்போதைய எரிபொருள் கையிருப்பு நிலவரம் மற்றும் அவை எத்தனை நாள்களுக்குப் போதுமானதாக இருக்கும் என்பது குறித்த விவரங் களை வலுசக்தி அமைச்சர் குமார ஜயகொடி நேற்று பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தார்.

அமைச்சரின் அறிவிப்பின்படி, தற்போதுள்ள கையிருப்பு பின்வரும் திகதிகள் வரை போதுமானதாக இருக்கும்:

சாதாரண டீசல் - ஏப்ரல் 12 ஆம் திகதி வரை.

92 ஒக்ரேன் பெற்றோல்-ஏப்ரல் 23 ஆம் திகதி வரை.

சுப்பர் டீசல் மற்றும் 95 ஒக்ரேன் பெற்றோல் - மே மாதம் 10 ஆம் திகதி வரை.

எரிபொருள் விநியோகத்தை சீராகப் பேணுவதற்கும், மேலதிக எரிபொருள் தொகைகளை நாட்டுக்கு வரவழைப்பதற்கும் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாக அமைச்சர் மேலும் தெரிவித்தார். (அ)

# இந்திய மீனவர்கள் விளக்கமறியலில்!

கிளிநொச்சி, மார்ச் 18

இலங்கை கடற்பரப்பில் கிளிநொச்சி - இரணைதீவுக்கு அண்மையாக, சட்டவிரோத மீன்பிடியில் ஈடுபட்டவேளை கைது செய்யப்பட்ட இரண்டு இந்திய மீனவர்களையும் எதிர்வரும் 24ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு கிளிநொச்சி மாவட்ட நீதிவான் நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டுள்ளது.

இரணைதீவிற்கு அன்மித்த கடல் பகுதியில் கடந்த 12ஆம் திகதி அதிகாலை சட்டவிரோத மீன்பிடியில் ஈடுபட்டிருந்த இரண்டு இந்திய மீனவர்களை கடற்படையினர் கைது செய்தனர்.

குறித்த இரு இந்திய மீனவர்களையும் கடந்த 12ஆம் திகதி இரவு கிளிநொச்சி மாவட்ட நீதவான் நீதிமன்றின் நீதவான் அறையில் முன்னிலைப் படுத்தியதையடுத்து நேற்று வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டிருந்தது.

இதனையடுத்த நேற்றைய தினம் கிளிநொச்சி மாவட்ட நீதிமன்ற நீதவான் பொன்னுத்துரை கிருசாந்தன் முன்னிலையில் ஆஜர்ப்படுத்தியதையடுத்து எதிர்வரும் 24 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது. (அ)

## எரிபொருள் நெருக்கடி நிலை:

# இலங்கையை போன்றே ஏனைய ஆசிய நாடுகளிலும் கட்டுப்பாடு!

கொழும்பு, மார்ச் 18

அமெரிக்கா மற்றும் இஸ்ரேலுக்கும் ஈரானுக்கும் இடையிலான போர்ச் சூழலால் ஏற்பட்டுள்ள எரிபொருள் நெருக்கடியைச் சமாளிக்க, ஆசிய நாடுகள் பல்வேறு சிக்கன நடவடிக்கைகளை அறிவித்துள்ளன.

கடந்த ஆண்டு ஹோர்முஸ் நீரிணை வழியாகக் கொண்டு செல்லப்பட்ட எண்ணெய் மற்றும் எரிவாயுவில் சுமார் 90 வீத ஆசிய நாடுகளுக்கே இறக்குமதி செய்யப்பட்டன.

தற்போது நிலவும் விநியோகத் தட்டுப்பாட்டினால் உலகின் மிகப்பெரிய எரிபொருள் இறக்குமதி பிராந்தியமான ஆசியா பெரும் சவால்களை எதிர்கொண்டு வருகிறது.

இந்த நெருக்கடியைக் கையாள அண்டை நாடுகள் பல முக்கிய நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளன.

**மியன்மார்:** தனியார் வாகனங்கள் அவற்றின் இலக்கத்தகடு எண்களின் அடிப்படையில் மாற்று நாட்களில் மட்டுமே இயங்க அனுமதிக்கப்படுகின்றன.

**பங்களாதேஷ்:** மின்சாரத்தைச் சேமிக்கும் நோக்கில் பல்கலைக்கழகங்களுக்கான ரம்ழான் விடுமுறை முன்கூட்டியே அறிவிக்கப்பட்டுள்ளது. அத்துடன் நாடு முழுவதும் திட்டமிட்ட மின்வெட்டு அமுல்படுத்தப்பட்டுள்ளது.

**பிலிப்பைன்ஸ்:** அரச அலுவலகப் பணியாளர்கள் வாரத்தில் ஒரு நாள் வீட்டிலிருந்தே பணியாற்ற அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

எரிபொருள் விநியோகத்தில் ஏற்பட்டுள்ள பாதிப்புகளைக் குறைக்க இத்தகைய கடும் கட்டுப்பாடுகளை அந்தந்த நாட்டு அரசாங்கங்கள் நடைமுறைப்படுத்தி வருகின்றன. (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 18.03.2026 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org